

அரையிறுதியில் தோல்வி; இறுதிப் போட்டியில் சம்பியன்

பக்கம் 26


# உதயன்

32 பக்கங்கள்
யாழ். - 30/=
வன்னி - 20/=

மழைக்கான சாத்தியக்கூறு
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 285 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 22, ஞாயிறு 07.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


## இறுதி ஆசையை நிறைவேற்றவும் இராணுவம் முல்லைத்தீவில் தடை

### படைமுகாம் முன்னால் சடலத்தை வைத்துப் பொதுமக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 07
இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ள வீட்டின் உரிமையாளர் உயிரிழந்துள்ள நிலையில் அவரது இறுதி ஆசைப்படி, அவரது உடலைச் சொந்த வீட்டில் வைத்து இறுதிக் கிரியைகள் செய்வதற்கும் இராணுவத்தினர் மறுத்துள்ளனர். இதனால் ஊர் மக்கள் அவரது உடலை, இராணுவ முகாம் முன்பாக வைத்து அஞ்சலி செலுத்துவதற்கு முயன்ற போது இராணுவத்தினர் அராஜகமாகச் செயற்பட்டு மக்களை விரட்டியடித்துள்ளனர். இந்த துயரச் சம்பவம் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

### வடக்கு – கிழக்கு இணைந்த

# இறைமையுள்ள ஓர் அரசு கிட்டும் வரை போராட்டம்

## கொழும்புக்கு காலக்கெடு விதித்தது தமிழரசு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 07
வடக்கு – கிழக்கு, தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள கொழும்பு அரசின் ஒடுக்குமுறைகள், எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் முடிவுக்கு வந்தாக வேண்டும். இந்த ஒடுக்குமுறைகளைக் கொழும்பு அரசு நிறுத்தத் தவறின், எதிர்வரும் ஜனவரி முதலாம் நாள் முதல் அஹிம்சைப் போராட்டம் தாயகப் பிரதேசம் எங்கும் வெடிக்கும்.
வடக்கு – கிழக்கு இணைந்த இறைமையுள்ள அரசு கிட்டும் வரையில் அந்தப் போராட்டம் தொடரும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு வவுனியாவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.
கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவும், தீர்மானங்களும் நேற்று இடம்பெற்ற மாநாட்டின் போது நிறைவேற்றப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பட்டுள்ள 15 தீர்மானங்களும், கட்சியின் இன்றைய மாநாட்டில் வைத்து பகிரங்கமாக அறிவிக்கப்படவுள்ளன.
வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழர்களின் இருப்பையே இல்லாதொழிக்கும் தனது அடக்குமுறை நடவடிக்கைகளை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ளவேண்டும்.
எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் – அடக்கு முறை நடவடிக்கைகளை நிறுத்தி, நிலைமையைச் சீர்செய்வதற்கு இலங்கை அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் முன்பள்ளி ஆய்வுப் பணி

யாழ்ப்பாணம், செப்.7
வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளின் நிலைமைகளை ஆய்வு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, ஆறுதல் நிறுவனம், யுனிசெவ் ஆகியவை இணைந்து மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைக்கு மாகாணத்தின் 12 வலயங்களிலும் கடமையாற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இந்த ஆய்வின் மூலம் முன்பள்ளிகளின் திறமையை மேம்படுத்தக் கூடிய பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன் பள்ளிகளின் பௌதிக வளங்கள் ஆசிரியர், மாணவர்களின் கற்றல் கற்பித்தல் தொடர்பான தகவல்களைப் பெறும் வகையில் வினாக்கொத்துக்களுக்கான நேர்காணல் என்பனவும் இடம் பெறும். (த-7)

## இலங்கை மீனவர்கள் தமிழகத்தில் கைது

கொழும்பு, செப்.7
இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் தமிழகக் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்களிடமிருந்து 300 கிலோ மீன் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்தவியாழக்கிழமை இலங்கை மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி தமிழகக் கடற் பரப்புக்குள் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது எல்லை தாண்டி வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக இலங்கை மீனவர்களை தமிழக காவல் படையினர் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட 5 மீனவர்களும் சென்னை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த-5)

## தமிழரசுக் கட்சித் தலைவராக மாவை



யாழ்ப்பாணம், செப். 7
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக மவை சேனாதிராசா நேற்று ஏகமனதாகத் தெரிவானார். பொதுச் செயலாளராக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராஜசிங்கம் தெரிவானார். இளைஞர் அணிச் செயலாளர் பதவிக்கு மட்டுமே கடும் எதிர்ப்புக் கிளப்பப்பட்டதுடன் எதிர் வேட்பாளரும் நிறுத்தப்பட்டார். ஏனைய பதவிகள் அனைத்தும் ஏகமனதாக ஏற்கப்பட்டன.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மாநாடு வவுனியா நகரசபை கலாசார

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை தொடர்பான விடயத்தில் கொள்கை மாற்றம் எதுவுமில்லை

### ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும் என்கிறார் புதிய ஆணையாளர் ஹுஸைன்



யாழ்ப்பாணம், செப். 07
இலங்கை தொடர்பான விடயத்தில் எதுவிதக் கொள்கை மாற்றமும் இல்லை என்பதுடன், இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய ஆணையாளர் கோரியுள்ளார். அத்துடன் இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தாக்கப்படுவது தொடர்பில் தனது கண்டனத்தையும் அவர் வெளியிட் டுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளராகச் சைய்த் அல் ஹுஸைன் கடந்த முதலாம் திகதி பொறுப்பேற்றுக்கொண்டார். இலங்கை தொடர்பான விடயத்தில், முன்னைய ஆணையாளர் நவநீதம்பிள்ளையைப் போன்று அவர் செயற்படமாட்டார் என்று இலங்கை அரசு நம்பிக்கை வெளியிட்டிருந்தது.
ஆனால் புதிய ஆணையாள

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## ராணுவ விடுதிகளுக்கு நெடுந்தீவுக் குதிரைகள்

யாழ்ப்பாணம், செப். 07
நெடுந்தீவிலுள்ள குதிரைகள் இராணுவத்தினர் அமைத்துள்ள விடுதிகளுக்கு கடந்த சில தினங்களாகக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதியுடனேயே அவை இவ்வாறு கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நெடுந்தீவிலுள்ள குதிரைகள் தொடர்பான கணக்கெடுப்பு அண்மையில் மேற்கொள்

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை அறிக்கை நாளை தொடங்கும் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், செப். 07
இலங்கை தொடர்பில் இடம் பெற்று வரும் சர்வதேச விசாரணையின் அறிக்கை, நாளை ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 27 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நாளை ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இந்தக் கூட்டத் தொடர் நடை

❖ 25 ஆம் பக்கம் பார்க்க


දිවිනැගුම
• பிணையாளர்கள்
• வயதெல்லை
• கட்டுப்பாடு
• மேலதிக பத்திரங்கள்
இல்லை
* வாழ்வின் எழுச்சி நன்மையாளர்களுக்கு மட்டும்





மீளச் செலுத்துதல் ஒரு வருடத்தின் பின்னர்
24 தவணைக் கட்டணங்களில் கொடுங்கள்
வருடாந்த வட்டி 4% மட்டுமே.
ரூ. 5000 தொடக்கம் 50,000 வரை
கேட்ட உடனே கைகளில் பணம்
இன்றே உங்களுடைய வாழ்வின் எழுச்சி பிரஜைகளுக்கான வங்கிக்குச் சமுகமளியுங்கள்



## வந்தது தீயணைப்பு வாகனம்

யாழ்ப்பாணம்.செப்.7

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு நவீன வசதிகளுடன் கூடிய 50 மில்லியன் ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம் நேற்றுத் தீயணைப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கடந்த மாதம் 29 ஆம் திகதி யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜாவிடம் கொழும்பில் வைத்து இந்த வாகனம் கையளிக்கப்பட்டது. இந்த நிலையில் தீயணைப்புப் பிரிவினர் குறித்த வாகனத்தைப் பயன்படுத்தி நேற்று தீயணைப்பை ஆரம்பித்து வைத்தனர்.

50 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட இந்த வாகனத்தில் 4 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு நீர்த் தாங்கியும், 10 மில்லியன் பெறுமதி கொண்ட தண்ணீர் பவுசரும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன், யாழ்.மாநகர சபையின் பிரதம பொறியிலாளர் கே.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-14)

## சிங்களக் குடியேற்றத்தை பார்வையிட்டார் ரன்கின்

யாழ்ப்பாணம், செப். 07

மூன்று நாள் பயணமாக வடக்குக்கு வருகை தந்த பிரிட்டன் தூதுவர், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களை நேரில் பார்வையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குக்கு மூன்று நாள் பயணமாக கடந்த முதலாம் திகதி பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கின் தலைமையிலான குழுவினர் வருகை தந்திருந்தனர். இந்தப் பயணத்தின்போது அவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்திருந்தனர்.

இதன்போது வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள சிங்க ளக் குடியேற்றங்களையும் பிரிட்டன் தூதுவர் தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் அரசின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் தரப்புக்கள் தெரிவித்து வருகின்றன. இவற்றின் உண்மை நிலையை நேரில் கண்டறீவதற்காவே பிரிட்டன் தூதுவர் சிங்களக் குடியேற்றங்களை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களையும், வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சிங்களக் குடியேற்றங்களையும் பிரிட்டன் தூதுவர் நேரில் பார்வையிட்டுள்ளார். (த-5)

## சினிமா பட்டறை ஏற்பாட்டில் 'கேர்ள் வோர்க்' திரைப்படம்

யாழ்ப்பானம், செப். 7

செயல் திறன் அரங்க இயக்கத்தின் மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக சினிமாத் துறைசார்ந்த செயற்திட்டங்களை ஊக்குவிப்பதற்காக சினிமா பட்டறை என்ற செயற் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் நமக்கான சினிமாவை நோக்கி பயணித்தல் என்ற நோக்கத்தோடு பல்வேறு செயற்றிட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

குறிப்பாக, நல்ல சினிமா ரசனையை வளர்த்தல், சினிமா பற்றியஆக்கபூர்வமான உரையாடல்களை ஊக்குவித்தல், சினிமா தொடர்பான கருத்தரங்குகள்; களப்பயிற்சிகளை நடத்துதல், குறும்படங்கள் தயாரித்தல் போன்ற செயற்றிட்டங்கள் ஆரம்பக் கட்டமாக திட்டமிடப்பட்டுள்ளன.


இதன் முதல் செயற்றிட்டமாகக் கலைத்துறை சார்ந்த சிறந்த சினிமாக்களை திரையிடும் நிகழ்வு ஆரம்பிக்கப்படுகின்றது.

நாளை திங்கட்கிழமை மாலை 6.45 மணிக்குப் பாணன் குளத்தடி, நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள செயல் திறன் அரங்க இயக்கத்தின் திறந்த வெளி மேடையில் அமெரிக்கத் திரைப்படமான கேர்ள் வோர்க் திரையிடப்படவுள் ளது. இது புத்தாக்க நடனத்தை அடிப்படையாகக் கொண்ட ஒன்றரை மணி நேரப் படமாகும்.

இந்தத் திரைப்படம் கலைத்துறைசார்ந்த குறிப்பாக இசை மற்றும் நடனத்துறை சார்ந்தோருக்கும் மற்றும் சினிமாத் துறை ஆர்வலர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். இலவசமாகக் காண்பிக்கப்படுகின்றதிரைப்படத்தை ஆர்வலர்கள் பார்வையிட முடியும். (த)









வரலாற்றுப் புகழ்மிக்க தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று சனிக்கிழமை இடம் பெற்றது. அதிகாலையில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெற்று காலை 8.30 மணி யளவில் அம்மன் வெளிவீதிக்கு வந்து தேரில் ஆரோகணித்தாள். அடியவர்களின் அரோகரா கோஷத்தின் மத்தியில் தேரில் வீதியுலா வந்தபோது ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப் பிரதட் சணம் செய்தும் அடியளித்தும் தமதுநேர்த்திகளை நிறைவு செய்ததையும் அடியவர்கள் கற்பூரச்சட்டி, பாற்செம்பு காவடிகள், தூக்குக் காவடிகள் எடுத்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (ஒ-86)

## சர்வதேச அஞ்சல் தினத்தின் பிரதான நிகழ்வு குடாநாட்டில்

### தபால் அமைச்சர் பங்கேற்கிறார்



யாழ்ப்பாணம், செப். 7

சர்வதேச அஞ்சல் தினத்தின் பிரதான நிகழ்வுகள் யாவும் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இந்த உலக அஞ்சல் தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு யாழ்.பிரதம தபாலகம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த உலக அஞ்சல் தின நிகழ்வில் தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க மற்றும் அஞ்சல் மா அதிபர், மத்திய தபால் திணைக்கள அதிகாரிகள் போன்றோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டுத் தபால் திணைக்களத்தில் சிறந்த முறையில் சேவையாற்றிய பணியாளர்களுக்கான விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் அஞ்சல் தினத்தின் போது அஞ்சல் வளாகங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுவதுடன் இரத்த தானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இதனை விட மேலும் செயற்பாடுகளை அஞ்சல் தினத்தின் போது மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது..

140 ஆவது உலக அஞ்சல் தினத்தின் பிரதான நிகழ்வு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளதால் நாட்டின் சகல தபால் பணியாளர்களையும் இந்த விழாவில் பங்குபற்றச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (த-17)

## வெட்டுப்புள்ளி வெளியானது

கொழும்பு, செப். 7

2013 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்றுக் காலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்வெளியிடப்பட்டுள்ளன.

வெட்டுப்புள்ளிகளை www.ugc.ac.lk ,www. admission.ugc.ac.lk ஆகிய இணையத்தளங்கள் மூலமாகவோ அல்லது அரச தகவல் நிலையத்தின் 1919 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலமாகவோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு 112695301, 0112 695302 ,0112692357, 0112678731 போன்ற இலக்கங்களினூடு தொடர்புகொள்வதன் மூலமாகவோ அல்லது 1919 என்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியும். (த-ரி)



யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினரால் நேற்று தீயணைப்புச் செயல்முறை நடைபெற்றபோது யாழ்.மாநகர சபைக்கு முன்பாக பழைய ரயர்கள் சூழல் மாசடையும் வகையில் எரியூட்டப்பட்டிருந்தன.இது குறித்துப் பலரும் விசனம் தெரிவித்தனர். (த-14)

# கர்ப்பிணியை மோதிய ரிப்பர் எரிப்பு; 6 இளைஞர்கள் பொலிஸால் கைது

அச்சுவேலி, செப்.7

நவக்கிரி வடக்குவெளி கிராமத்தில் கர்ப்பிணி இளம் தாயை நெரித்துக் கொன்ற மகேஸ்வரி நிதியத்துக்குச் சொந்தமான ரிப்பர் வாகனத்தை எரித்தமை தொடர்பாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 6 இளைஞர்கள் நேற்றுச் சனிக்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் விபத்தில் உயிரிழந்த பெண்மணியின் கணவர் மற்றும் கணவனின் மூத்த சகோதரன் ஆகியோர் உள்ளடங்குவர். அமிர்தலிங்கம் கசிந்திரன் (வயது -26), விபத்தில் உயிரிழந்த இளம்பெண்ணின் கணவர் அமிர்தலிங்கம் கமலேஸ்வரன் (வயது-28), இறந்த பெண்ணின் மைத்துனர் சுதாகரன் சுமன் (வயது-20), ரஞ்சன் றஜீவன் (வயது-26), சந்திரன் டேவிற் (வயது-20), பரமநாதன் கோபால் (வயது-20) ஆகிய ஆறு பேருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

ரிப்பருக்குத் தீவைத்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேரை கடந்த திங்கட்கிழமை அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்தமைக்கு ஆட்சேபனை தெரிவித்து வடக்குவெளிக் கிராமத்தைச் சேர்ந்த 300க்கும்மேற்பட்ட பொதுமக்கள் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகக் கூடி எதிர்ப்புத் தெரிவித்தனர். குறிப்பிட்ட சிலரை விசாரணைக்கு உட்படுத்தவோ, கைது செய்யவோ கூடாது எனவும் கிராம மக்கள் எல்லோரையும் விசாரணை செய்யுங்கள் எனவும் ஒருமித்து கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களைச் சமாதானம் செய்து திருப்பி அனுப்பி வைத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் உயர் அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் வடக்கு வெளி பொது நோக்கு மண்டபத்தில் கிராம மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தனர்.

வடக்கு வெளி கிராமத்துக்கு உள்ளே சென்று சந்தேக நபர்களைக் கைது செய்தால் கிராம மக்கள் ஒருமித்து எதிர்ப்பு தெரிவிக்கலாம் என்பதால் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் நேற்று சனிக்கிழமை வேலைக்கு செல்லும் போது கிராமத்துக்கு வெளியே வீதியில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-11)

# வடிகால்களில் பியர் ரின்கள் கழிவுநீர் ஓடமுடியாத நிலை

## யாழ்.நகரப் பகுதியில் துர்நாற்றம்

யாழ். நகரின் பிரதான வடிகால்களில் பியர் ரின்கள் வீசப்படுவதால் கழிவுநீர் வழிந்தோட முடியாமல் தேங்கிய நிலையில் துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது.

நகரில் உள்ள மதுபானச் சாலைகளில் இருந்து பியர் ரின்களை வாங்கும் மதுப் பிரியர்கள் அதனைக் குடித்து விட்டு வெற்று ரின்களை கைக்கு எட்டிய கால்வாய்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

ஏற்கனவே கழிவு நீர் வழிந்தோடமுடியாமல்கழிவுப்பொருள்கள் நிறைந்து காணப்படும் நிலையில் வாய்க்கால்களை அடைக்கும் விதத்தில் இந்த பியர் ரின்கள் வீசப்படுகின்றன.

அண்மையில் கே.கே.எஸ். வீதியில் உள்ள வடிகால் கழிவுப் பொருள்களால் அடைபட்டதால் துார்நாற்றம் வீசியதை அடுத்து மாநகர சபையால் அது சீர் செய்யப்பட்டது. இதன்போது வெற்று பியர் ரின்கள் மற்றும் பொலித்தீன்களே அந்த வடிகாலில் அதிகளவு காணப்பட்டுள்ளது.

நகரை அழகுபடுத்தும் திட்டத்தில் யாழ்.மாநகர சபையால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கால்வாய்கள் இவ்வாறு சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதால் நகரின் அழகும் சுகாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. (த-14-17)

# கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட ஆசைப்படுகின்றார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப்.7

கடந்த காலங்களில் எமக்குக் கிடைக்கப் பெற்ற சந்தர்ப்பங்களை நாங்கள் தவறவிட்டோம். இனியும் அவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவற விடமாட்டோம் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இவரது கருத்து உண்மையானதாக இருந்தால் அதனை வரவேற்பதுடன் அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருக்கான தீயணைப்பு வாகனக் கையளிப்பு நிகழ்வு நேற்று யாழ். மாநகர சபை வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட அவர் திடீர் செய்தியாளர் சந்திப்பை அந்த இடத்தில் நடத்திய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் தேசிய மாநாடு நேற்று (நேற்று முன்தினம்) ஆரம்பமானபோது கட்சியின் முன்னாள் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அதனைப் பத்திரிகைகள் ஊடாகவும் அறிய முடிந்தது. அவர் கருத்துக்களை மாறிச் சொல்லிவிட்டாரா? நீங்கள் கூறும் கருத்துக்கள் போல் உள்ளது என என்னிடம் பலர் கேட்டிருந்தனர். எனினும் அவர் அந்தக் கூட்டத்தில் அத்தகைய கருத்துக்களை தெரிவித்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் மக்களுக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களைக் கடந்த காலங்களில் தவறவிட்டோம். இனியும் அவ்வாறு தவறவிடக்கூடாது. உணர்ச்சிவசமான கருத்துக்களை வெளியிடுவதன் ஊடாகச் சில பிரச்சினைகளை அணுகமுடியாது என சம்பந்தன் தெரிவித்திருக்கிறார். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரமா அல்லது காலம் கடந்த பின்னர் கிடைத்த ஞானோதயமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

உண்மையான அர்த்தத்துடன் இத்தகைய கருத்துக்களை அவர் வெளியிட்டிருந்தால் அவற்றை நடைமுறைப் படுத்த நாங்கள் நிச்சயம் ஒத்துழைப்பு வழங்குவோம். அவர்களுடன் சேர்ந்து செயற்படவும்தயாராக இருக்கிறோம். தொடர்ந்தும் மக்களுடைய ஆதரவு எந்தளவுக்குக் கூடுகிறதோ அதற்கேற்றால் போல் எங்கள் செயற்பாடு இருக்கும்-என்றார். (த-14)

# வாகனம் மோதிய பெண் சிகிச்சை பயனின்றிச் சாவு

வெளிநாட்டில் இருந்து வந்த சகோதரியை அழைத்துவரக் கொழும்பு சென்று திரும்பிய 4 பிள்ளைகளின் தாயார் முறிகண்டி ஆலயத்துக்கு முன்பாக வீதியோரத்தில் நின்ற போது வாகனம் மோதிப் படுகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

குருநகர், யாழ்ப்பாணத்தை சேர்ந்த அல்பிரட் ஜெனிசன் மரியராணி (வயது-51) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 30 ஆம் திகதி முறிகண்டியில் தேநீர்ச் சாலையில் உணவு அருந்திவிட்டு வீதியின் இடது பக்கமாக நின்ற இவரை வாகனம் ஒன்று மோதிவிட்டு தப்பிச் சென்றது.

காயமடைந்த அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா வைத்திசாலைக்கு மாற்றப் பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (த-14)



தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியபோது அதன் அரசியற் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், தலைவர் மாவை சேனாதிராசா உள்ளிட்ட கட்சி முக்கிய முக்கியஸ்தர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (த-402)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 7

உதயன் பத்திரிகையின் 21.08.14 பதிப்பில் வெளிவந்த "அரச அதிபருக்கு எதிரான முறைப்பாடு" என்ற தலைப்பிலான செய்தி தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் தனது இடமாற்றம் குறித்து யாழ். அரச அதிபருக்கு எதிராகச் செய்த முறைப்பாடு குறித்து அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கனகராஜ் அனுப்பியுள்ள விளக்கத்தில், யாழ். அரச அதிபர், முறைப்பாடு குறித்து "இதுவரையில் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் தொனியில்" தான் கருத்து எதனையும் உதயன் பத்திரிகைச் செய்தியாளருக்குத் தெரிவிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்.

அரச அதிபரிடம் விளக்கம் கேட்டு 11.08.14 அன்று ஆணைக்குழுவால் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது என்றும் அதில் 14 நாள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கிடையில் - அதாவது 14 நாள்கள் முடிவடைவதற்கிடையில், "அரச அதிபர் இன்னமும் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று செய்தி வெளியிட்டமை தவறாகும்" என்றும் கனகராஜ் தனது விளக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆசிரியர் குறிப்பு:

1. இந்தச் செய்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவாலோ அதன் பிராந்திய இணைப்பாளராலோ வழங்கப்பட்டதல்ல. அப்படியொரு முறைப்பாடு ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே கனகராஜுக்கு அழைப்பு எடுக்கப்பட்டது. அவர் அதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

2. அந்த முறைப்பாட்டுக்கு அரச அதிபர் பதிலளித்துவிட்டாரா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, "இதுவரையில் கிடைக்கவில்லை" என்று அவர் பதிலளித்திருந்தார். அதுவே செய்தியிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

3. அரச அதிபர் பதில் வழங்குவதற்கு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி உதயன் பத்திரிகைக்குத் தெரிவிக்கப்படவில்லை.

4. கேள்வி எழுப்பப்பட்டு அன்று வரையில் விளக்கம் அனுப்பப்படவில்லை என்பது மட்டுமே செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை, உதயன் "திரித்து" வெளியிட்டது என்று கனகராஜ் தனது விளக்கத்தில் குறிப்பிட்டிருப்பது தவறு. அவர் என்ன சொன்னாரோ அது மட்டுமே செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. தவறாக அர்த்தம் கொள்ளும்படி அந்தச் செய்தி எந்தவொரு இடத்திலும் வழிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. ஒரு விடயத்தை உறுதிப்படுத்தி வெளியிட வேண்டியது பத்திரிகையின் கடமை. அதனையே உதயன் செய்தது. மக்களுக்கு உண்மையான, துல்லியமான செய்திகளை வழங்குவதற்கு இது அவசியம். அதற்கு மேலாக அந்தச் செய்தியில் எந்த ஒரு விடயமும் தேவைக்கு அதிகமாக அழுத்திச் சொல்லப்படவில்லை. அப்படி இருந்தும் யாராவது அதற்குத் தப்பர்த்தம் கற்பித்திருந்தால் அது அவர்களின் தவறே தவிர பத்திரிகையின் தவறு அல்ல.

5. மேலும், பத்திரிகைக்கு இவ்வாறு செய்தி வழங்கியிருக்கிறார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு அலுவலகத்தில் யாழ். இணைப்பாளருக்கு எதிராக அரச அதிபர் செய்துள்ள முறைப்பாட்டைத் தொடர்ந்தே இத்தகைய ஒரு விளக்கம் அனுப்பப்பட்டுள்ளது என்று உதயன் அறிந்துள்ளது. (உ)

SINGER FINANCE இடமிருந்து மட்டுமே

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக அதிககடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்




தொடர்புகளுக்கு

கலைதேவன் (வவுனியா) 077 3 675 022
சுதன் (மன்னார்) 077 3 550 018
சுஜந்தன் (யாழ்ப்பாணம்) 077 7 391 449
தர்ஷன் (யாழ்ப்பாணம்) 077 7 009 666
தனு (யாழ்ப்பாணம்) 077 9 357 124

இல.80, நவம்மாவத்தை, கொழும்பு 02. www.singerfinance.com

## கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக முதுகல்விமாணி (2013/2015) ஆசிரிய மாணவன் **செ. ஜெயமோகன்** அவர்க ளின் அன்புத் தாயார்

**செல்லையா கனகம்மா**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**இணைப்பாளர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்.**
**முதுகல்விமாணி 2013/2015**
**தேசிய கல்வி நிறுவக**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி பிராந்திய நிலையம்.**

## மரண அறிவித்தல்



### திருமதி தர்மவதி தாமோதரம்

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், இல. 33, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மவதி தாமோதரம் நேற்று (06.09.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மைதிலி, இளமுருகன் ஆகியோரின் தாயும், தாமோதரத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
33, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(51806)

**தகவல்:**
**பிள்ளைகள்**
**மைதிலி, இளமுருகன்.**

**சிங்களம்** புதிய பிரிவுகள் மற்றும் G.C.E O/L PAST PAPER CLASSES

இலகுவான முறையில் பேச, எழுத, வாசிக்க கற்பிக்கப்படும்.
உங்கள் வசதிக்கேட்ப கிழமையில் விரும்பிய இரு தினங்களில் வகுப்பிற்கு சமூகம் தரலாம்.சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில்

எவரும் எத்தினத்திலும் வகுப்பில் இணையலாம். ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி,மாணவர்கள், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் Level I, II, III பரீட்சை எடுப்பவர்கள்இணைந்து பயன் பெறலாம்.

level I, II, III பரீட்சை தோற்ற உள்ளவர்கள்

PAST PAPER CLASS

இல 41, றக்காலேன்,சுண்டிற்குழி, யாழ்ப்பாணத்தில்
செவ்வாய் மற்றும் வியாழன் மாலை 5.30-7.00 மணிவரை
இல 72, இராமநாதன் வீதி கலட்டி, யாழ்ப்பாணத்தில்சனி மதியம் 12.30-2.00 வரை
திங்கள் மற்றும் வெள்ளி மாலை 6.30-8.00 மணிவரை

**ஸ்ரீ மாஸ்டர் - 077 703 3729**

## மரண அறிவித்தல்



### பேர்ணதேத்தம்மா (நேசம்மா) அந்தோனிப்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற அநதோனிப்பிள்ளையின் அன்பு மனைவி பெர்ணதேத்தம்மா (நேசம்மா) நேற்று முன்தினம் (05.09.2014) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் மேரி ஜோசேப் (மெக்கானிக் சவுந்தரம்-வவுனியா), மேரி றீற்றா (றஞ்சி-யாழ்ப்பாணம்), பிரான்சிஸ் வில்பிறட் (யோகம்-கனடா), றெஜினோல்ட் அன்ரன் (நவம்-கனடா), ஆன்சலோன் குணராசா (குணம்-சில் லாலை), யேசுதாசன் (தாசன்-கனடா), ஹென்றிக் ராசா (ராசா-கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், லூர்து றோஸ், யமுனா, சுமதி, றோகினி, ராணி, விமலா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை (08.09.2014) திங்கட்கிழமை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குணம் (மெக்கானிக்) - மகன்**

**மக்கள், மருக்கள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.** (51821) (10) **சில்லாலை, பண்டத்தரிப்பு**

## மரண அறிவித்தல்



### செல்லையா துரைராசசிங்கம்

யாழ். கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா துரைராசசிங்கம் (முகாமையாளர் S.V.S. Company Ltd) நேற்று (06.09.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சித்திராவின் அன்புக் கணவரும், திருமதி துசிக்கா, நிஷாந்த, துசிமிளா, துசிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு நிஷாந்தவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - திரவியம் மற்றும் திஸவீரசிங்கம் (ஜெயம் நெல்லியடி Supper market) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லக்ஷன், சஹானா,நித்திக் ஹரின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (07.09.2014)ஞாயிற்றுக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசைப் பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியடி, கரவெட்டி. (51819) **தகவல்: குடும்பத்தினர். 077 152 6049, 077 392 7815**

## மரண அறிவித்தல்



### திருமதி
### சங்கரப்பிள்ளை கண்மணி

யாழ்ப்பாணம் அனலைதீவைப் பிறப்பிடமாகவும், ஆனைப் பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை கண்மணி (அப்புச்சி) அவர்கள் நேற்று (06.09.2014) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி சரவணமுத்து பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு திருமதி நகேந்திரம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, கணபதிப்பிள்ளை, கந்தையா, சின்னம்மா மற்றும் ஆச்சிமுத்து அவர்களின் அன்புச் சகோதரியும், சண்முகலிங்கம், காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் பரமலிங்கம், கமலாம்பிகை, ஆனந்த லட்சுமி, கேதீஸ்வரன், தனலட்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் திலகவதி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் வதனி, தவேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேஸ்குமார்- விஜயகௌரி, ராஜ்குமார் - ராஜேஸ்வரி, ரவீந்திரகுமார் - உஷாதேவி, ரமேஸ்குமார் - ரூபா, சிவகுமார் - ஸ்ரீதர்சினி, பிரியதர்ஷினி - கணேசலிங்கம், சுபாசினி, சதீஸ்குமார் - மணிமேகலை, அசோக்குமார் - நிலாந்தினி, ஜெயவதனி - பஞ்சாட்சரம் ஜெயகௌரி - சிவசுந்தரம், விஜயமோகன் - சபாநந்தினி, ஜெயகீதா - ஸ்ரீரங்கன், விஜயகாந்தன், காண்டீபன், விதூஷினி - ரஜீவன், லக்ஷிகா, ரஜிதா ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், ஆகாஷ், சப்திகா, சரோன், யோசான், யோகான், அஸ்விகன், அஷானி, அதீஸ், அபினாஸ், அப்சரன், அஷிகா, யனு, கபிஸ்சன், நக்சிக்கா, திசியா, விதுஸ், டிர்றுஸ், ஐஸ்வின் ஆகியோரின் பூட்டிமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.09.2014 திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(51816) **தகவல்: குடும்பத்தினர்.**



**29 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்**
**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**

யாழ் **கலாலயா** பயிற்சியகம்

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,* - *Hair Dressing & Styling* (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்) - Nail art
- *முக அழகுக் கலை* (Facials) - Pedicure, Manicure (கைகள்,கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் - இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 14-09-2014**
**ஞாயிறு காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 15-09-2014**
**திங்கள் காலை 9.30 மணி**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**

-இயக்குநர்-

GURU

## நீங்கா நினைவலைகளில் 2 ஆம் ஆண்டு

மலர்வு 15 02 1934 — உதிர்வு 18 08 2012



**சின்னத்தங்கம் இராஜதுரை**

திதி: வளர்பிறை பிரதமை

மலர்வு 20 04 1931 — உதிர்வு 30 08 2012



**பொன்னம்பலம் இராஜதுரை**

திதி: வளர்பிறை சதுர்த்தசி

**நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ண மதில் என்றும் நிலைத்து**
**வண்ண மலர் வாசமாக மனதில் நின்றீர்கள் !**
**கண்ணிமைக்கும் காலத்துள் காலனுமைக் கவர்ந்து சென்ற**
**கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்.**
**ஈராண்டுகள் சென்ற பின்னும் என்றும் அழியா நினைவுகளுடன்**

**பிள்ளைகள், மருமக்கள் , பேரப்பிள்ளைகள்.**

[51804]

## மரண அறிவித்தல்

### திருமதி சொர்ணாம்பிகை மனோகரன்



கேசரி வீதி தையிட்டி, காங்கேசந்துறையைப் பிறப்பிடமாகவும், காரைக் கால் சிவன் கோயிலடி, இணுவிலை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணாம்பிகை மனோகரன் நேற்று (06.09.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முருகுப்பிள்ளை மனோகரனின் அன்பு மனைவியும், தர்சனின் (கிளை முகாமையாளர் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) தாயும், காலஞ்சென்ற வர்களான துரைச்சாமி - சின்னத் தங்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற முருகுப்பிள்ளை மற்றும் சின்னம்மா தம்பதியரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று மதியம் (07.09.2014) ஞாயிற்றுக்கிழமை 12.30க்கு நடைபெறறு, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால், இணுவில்.
077 414 6126 (51810)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுக்கான செயலமர்வு நாளை

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினர் உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ள வேண்டிய தந்திரோபாய திட்டமிடலுக்கான செயலமர்வுகளை மாகாண ரீதியாக நடத்தி வருகின்றனர். வடமாகாண உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நடத்தபடவுள்ளதாக சம்மேளனத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹேமந்தி குணசேகர அறிவித்துள்ளார். (ஓ-9)

**STUDY IN LONDON**
CAMBRIDGE, WALES, LIVERPOOL
SPOT ASSESSMENT
• SCHOLARSHIPS AVAILABLE
WORK PLACEMENTS

EXPLORE OPPORTUNITIES TO LIVE STUDY AND WORK IN CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SOUTH AFRICA & GERMANY

**Postgraduate & PhD & Undergraduate Courses**
• MBA • Art & Design • Medicine • Biomedical Science • Business Studies &HRM • Accounting & Finance • Computer Science • Education • Engineering • Nursing • Hospitality Mgt.

FREE VISA GUIDANCE
- ✓PhD STUDENTS APPLICATIONS APPROVAL TIME APPOX.4 WEEKS
- ✓POSTGRADUATE STUDENTS CAN APPLY WITH DEPENDENTS
- ✓MATURE STUDENTS ARE WELCOME TO APPLY
- ✓Advanced entry for students with CIM CIMA ABE NCC BCS HND
- ✓ACCA and other recognized qualifications
- ✓G.C.E A/L students can apply pending results
- ✓Students with GCE O/L's can apply

FEBRUARY 2015 INTAKE

*University of East London* · *University of Bedfordshire* · *London Metropolitian University* · *Anglia Ruskin University* · *University of South Wales* · *Ealing Hammersmith & West London College* · *Bradford College*

HELPLINE CALL LOHO 0777 917929

LOHOS TOPS 400 STUDENTS

*Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 400 students to UK Universities*

**JAFFNA INTERVIEWS:**
Mr Loho will be conducting interviews at Subhas Hotel, No: 49 Victoria Road, Jaffna on 8th September 2014 from 12.00 Noon to 5.00 p.m. Please bring originals and photocopies of your documents. for appointments

**Call 0777 917929 or 0773 498660**

Lohos Group Office: Lucky Plaza Building 4/7, 4th Floor St.Anthony's Mawatha Kollupitiya Colombo 03 Tel : 2577768 / 0777 917929
lohosgroup@sltnet.lk, lohosgroup@yahoo.com www.lohosgroup.com

தமிழில் தொடர்புகளுக்கு: Dr.இந்திராணி - Tel :0773 498660

## கண்ணீர் அஞ்சலி



**கதிரவேலு கேதீஸ்வரன்**
(முன்னாள் பொது முகாமையாளர், உதயன் பணிமனை)

முன்னாள் பொது முகாமையாளராகக் கடமையாற்றி 04.09.2014 வியாழக்கிழமை திடீர் மரணமடைந்த கதிரவேலு கேதீஸ்வரன் அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டுத் துயருறுகின்றோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் பணிமனை. நிர்வாக இயக்குநரும் பணியாளர்களும்.

(சி/16545)(4.3.6)

### சமய சந்நிதிகளில்

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு இரதோற்சவமும் நாளை திங்கட் கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஓ-100)

◆◆◆

ஆனைக்கோட்டை சிறீவரத விக்ன விநாயக சம்பந்தப் பிள்ளையார் ஆலய இரதோற்சவம் இன்று காலை 10மணிக்கும் தொடர்ந்து நாளை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஓ-100)

### பரிசளிப்பு நிகழ்வு

மட்டுவில் ரதீஸ் பல்பொருள் விற்பனை நிலையத்தினால் நடத்தப்பட்ட ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியிற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ.கலாமணியும், சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர் திருமதி லியோன் புஸ்பராணி, சாவகச்சேரி பிரதேச சபையின் ஓய்வு நிலை செயலாளர் வே.சிவராஜலிங்கம்,சாவகச்சேரிபொலிஸ் நிலைய தலைமைக் காரியாலயப் பரிசோதகர் டபிள்யூ.ஏ.கே.டிவன்னியாராய்ச்சி ஆகியோரும் கலந்து கொள்வர். (த-9)

### சைவப்பெருவிழா இன்று நல்லூரில்

உலக சைவத் திருச்சபையின் மாபெரும் சைவப்பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உலக சைவத் திருச்சபையின் யாழ். மாவட்ட தலைவர் கலாநிதி. சுப்பிரமணியம் நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் கார்த்திகேசு கணபதிப்பிள்ளை கலந்து கொள்வார்.நிகழ்வில்இலங்கை வாழ் சைவத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான இறுவெட்டு வெளியீடும்,பெரிய புராணத்தில் பெருமை சேர்ப்பதில் விஞ்சி நிற்பது அடியவரின் சாதனையா? ஆண்டவனின் சாதனையா? என்னும் தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளன. (த-14)

## நிறைவேற்றுக் குழு உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.7
யாழ்.வை.எம்.சி.ஏ.நிறுவன பொதுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. நடப்பு வருட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் வருமாறு:-
தலைவர் ஆர்.வினோத், உபதலைவர் ஆர்.ஜே.சுதர்சன், டி.ஏ.குணரத்தினம், செயலாளர் எஸ்.ஜெயராஜசிங்கம், பொருளாளர் வி.டானியல் ஜெயரூபன் உறுப்பினர் ஏ.டொனால்ட். (ஒ-9)

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலரும், ஊழியர் நலன்புரி சங்கத்தின் முன்னாள் தலைவருமாகிய

**கதிரவேலு கேதீஸ்வரன்**

அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிவிட்டார் என்ற செய்தி கேட்டு பெருந்துயர் கொண்டுள்ளோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்
நலன்புரி சங்கம்
தென்மராட்சி, சாவகச்சேரி

## மரண அறிவித்தல்

திருமதி **கனகம்மா செல்லையா**



யார்க்கரு, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், அந்திரான் நெல்லியடியை வதிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா செல்லையா நேற்று (06.09.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும், சிவராசா (ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி), தேவராசா (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயசாந்தன் (டென்மார்க்), ஜெயசீலன் (லண்டன்), ஜெயநதி (ஆசிரியை, யா/செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை), ஜெயமோகன் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), ஜெயவாணி (ஆசிரியை யா/ஞானசாரியார் கல்லூரி), ஜெயபாமினி (ஆசிரியை, யா/கரவெட்டி சரஸ்வதி மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபத்திரா (டென்மார்க்), சுதர்சினி (லண்டன்), கலைச்செல்வன் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி), நகுலேந்திரன் (கண்ணன் - மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப் பாளர், சேவாலங்கா - யாழ்ப்பாணம்), கல்யாணி (ஆசிரியர், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பரணீதரன் (விக்னேஸ்வராக்கல்லூரி - இணைப்பு பயிற்சி அதிகாரி 22NCC) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிநேகா, சிவான்ஜா, கஜீவன், சச்சின், வர்ணிகா, ஆர்த்திகா, கேசனா, அவந்திகா, சாருகா, அனங்கவி, கவிநயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் கரவெட்டி கிழக்கு யார்க்கரு இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக வீரக்கழி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யார்க்கரு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(C16543)(12.6)

தகவல்:
குடும்பத்தினர்.
021 321 1441

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



எமது குடும்ப விளக்கு

அமரர்

**முத்தையா திலீபன்**

தோற்றம்
23.03.1987

மறைவு
11.06.2014

அவர்களின் திடீர் மறைவினை அறிந்து உதவிகள் பல புரிந்த உள்ளங்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் வேறு பல உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரது வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (08.09.2014) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். அத்துடன் நாளை மறுதினம் 09.09.2014 அன்று இராமநாதபுரம் வட்டக்கச்சி எனும் முகவரியில் உள்ள அன்னாரின் பிறப்பிட இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தனிப்பட்ட அழைப்புக்களை வழங்க முடியாமைக்கு வருந்துவதோடு, இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(45519)(4.3.6)

தம்பகாமம்,
பளை.

குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

கொழும்பு - 06, வெள்ளவத்தையில் அமைந்துள்ள முன்னணி சுப்பர்மார்க்கட் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. வயலெல்லை 18 - 26 வரை. உணவு, தங்குமிடத்துடன் கூடிய சம்பளம் வழங்கப்படும்.

**TP: 077 177 8212** (51769) (12.3.6)




## கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்

இருப்பகற்றல் மற்றும் மலிவு விற்பனையை முன்னிட்டு ஜெயசாயி இல் விற்பனை செய்யும் அனைத்து பொருள்களும் குறித்த விலையில் இருந்து அரைவாசி விலைக்குப் பெற்றுக் கொள்வதுடன் 6, 7, 8 ஆகிய தினங்களில் 3000/= ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களும் பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**6, 7, 8 மட்டும்**

114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393 (51760)(7.6)





**UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...**

## வங்கியில் பணவைப்பு

**Saving book, Fixed Deposit, Statement**

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

**Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...**

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

**SKYWALK** Visa Solutions

ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

**077-7711905**



## துபாயில் உடனடி வேலைவாய்ப்பு

| தொழில்வகை | சம்பளம் |
|---|---|
| விற்பனையாளர்கள் | 3000 திர்ஹம் |
| காட்சி உதவியாளர் | 2300+200 திர்ஹம் |
| விநியோக உதவியாளர் | 1400 திர்ஹம் |
| உதவியாளர் | 1400 திர்ஹம் |

வெளிநாட்டு அதிபர்களால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் இரு புகைப்படங்கள் உட்பட இரு கடவுச்சீட்டுப் பிரதி உடன் வருகை தரவும்.

**கிளிநொச்சியில்**

இடம் : முள்ளய் ரெஸ்ட் ஹோட்டல்
உதய நகர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி .
காலம் : (10.09.2014) புதன்கிழமை,
நேரம் : காலை 9.00 மணி முதல்
மாலை:4.00 மணி வரை

**முல்லைத்தீவில்**

இடம் : சரஸ்வதி கல்யாண மண்டபம்,
முருகன் கோயில் ஒழுங்கை, வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
காலம்: (11.09.2014) வியாழக்கிழமை,
நேரம் ; காலை 9.00 மணி முதல்
மாலை:4.00 மணி வரை



தொடர்புகளுக்கு:
Akram :0785811812
Roshan:0756885915

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் KKS வீதியில் பழைய பொலிஸ் ஸ்ரேசன் ஒழுங்கையில் இரண்டாவது காணி (8½ பரப்பு) விற்பனைக்குண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.(சி/16430) (7.6.3)

தொடர்பு: 077 731 0588

## கண்ணீர் அஞ்சலி



### கதிரவேலு கேதீஸ்வரன்

(முன்னாள் பிரதேச செயலாளர், முன்னாள் திட்டப் பணிப்பாளர், முன்னாள் பொது முகாமையாளர் உதயன் பணிமனை)

அவர்கள் 04.09.2014 வியாழக்கிழமை திடீர் மரணமடைந்தார். இந்த மரணச் செய்தியைக் கேட்டுத் துயற்றிருக்கும் தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செ.மணிவர்ணன் [குடும்பம்]
கல்வியங்காடு வடக்கு, நல்லூர்.

வாணி ரெக்ஸ்
இல.81, பெரியகடை,
யாழ்ப்பாணம். (சி/16540)(4.3.6)

## கண்ணீர் அஞ்சலி

### வல்லிபுரம் இராமலிங்கம்

(இளைப்பாறிய முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

கடந்த வியாழக்கிழமை 04.09.2014 காலமான சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஓய்வுபெற்ற முகாமையாளரின் மரணத்தால் கவலையுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



செ.மணிவர்ணன் (குடும்பம்)
கல்வியங்காடு வடக்கு, நல்லூர். (சி/16539)(7.6.3)

வாணி ரெக்ஸ்
இல. 81, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கும் - சந்தைக்கும் இடைப்பட்ட பகுதியில் இணைந்த குளியலறையுடனும் சகல வசதிகளுடனும் விசாலமான வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (47871) (12.3.6)

**TP: 077 827 6280/077 333 0073**

## நாகபூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் டாக்டர் , பொறியியலாளர், எக்கௌண்டன், வங்கி உத்தியோகத்தர், ஆசிரியர், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்யலாம்.

7 நாள்களும் திறந்திருக்கும்.
15/11, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 9306, 077 138 7596,
075 554 6000 (51788)(7.6.3)
email : nakapoosanywedding@gmail.com

* 1981இல் பிறந்த 5 கிரக பாவமுடைய வெளிநாட்டில் Software Engineer ஆகப் பணிபுரியும் அழகிய மணமகளுக்கு தகுந்த வரனை உடன் எதிர்பார்க்கிறோம்.

## இறைச்சிக்கோழி மொத்த விற்பனைக்கு

**1kg-240/=**

தொடர்பு: சிவா கோண்டாவில்
078 733 5874 (51779) (4.6.3)

## AAT வவுனியாவில்

தொழில்துறை கணக்காளராக எளிய வழி. மிகக் குறைந்த கட்டணம்.
தொழில் பதிவு ஏற்பாடு
**ஆரம்பம்: 06.09.2014**

தொடர்பு: 077 971 3221 (48806) (4.6.3)

## விற்பனைக்கு/வாடகைக்கு

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் சிறாம்பியடி யாழ் வீதியில் 2¼ பரப்புக் காணியில் இரண்டு வீடுகள் விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு. (சி/16433)(7.6.3)

தொடர்பு: 077 908 6864, 011 259 3957

## காணி விற்பனைக்கு

318/5, KKS றோட், மருதனார்மடம், 2 பரப்பு 12.5 குழி, 11/5, தில்லையிட்டி வீதி, சுன்னாகம், 7 பரப்பு 0.3 குழி. (சி/16432)(7.6.3)

தொடர்பு: 076 320 4577, 011 236 0314

## மணமகள் தேவை

1987-R.C யாழ். உயர் குடும்பத்தைச் சேர்ந்த அரச வங்கியில் பணிபுரியும் B.B.A பயிலும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 503 1628 (51717) (4.6.3)

## நிரந்தர தொழில் வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் ஜாம்/ரொபி/பிஸ்கற்/கோடியல்/பாஸ்மா/கிளவுஸ் போன்ற பல தொழிற்சாலைகளில் நிரந்தர தொழில் வாய்ப்பினை இன்றே பெற்றுக் கொள்ளலாம். 18 - 50 வயது. ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/- 32000/= வரை. மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள். (48991) (12.3.6)

**TP: 077 111 6770/077 683 8231**

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் இல.227, 3 ஆம் குறுக்குத்தெருவில், அடைக்கல அன்னை ஆலயத்திற்கு (O.L.R) அருகில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட (தற்போது "வேள்ட் விஷன்" நிறுவனம் இயங்குகின்ற) வீடு ஒக்ரோபர் மாதம் முதல் வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 077 083 3936/011 254 1173 (51783) (12.3.6)

## வீடு வாடகைக்குண்டு

யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதியில் 8 அறைகளைக் கொண்ட விசாலமான மேல் மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 903 7568/077 230 6727 (51782)(4.6.3)

## காணி, வீடு விற்பனைக்கு (உறுதிக்காணி)

வவுனியா, வைரவபுளியங்குளம், வைரவர் கோயில் வீதியில் சிறுவர் பூங்கா மைதானத்துக்கு அருகில் 34.13 பேர்ச்சர்ஸ் காணியும், வீடும் 37.83 பேர்ச்சர்ஸ் காணியும் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை) (51781) (4.6.3)

தொடர்பு: 077 886 6614/077 312 1328

## தேவை

எமது செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு பராமரிப்பாளர்
வயதெல்லை - 30–45 [பெண்]
பஸ் சாரதி :
வயதெல்லை 25–45. தேவை
உடன் தொடர்பு கொள்ளவும்
தொலைபேசி: 071 535 4504
முகவரி: செஞ்சோலை சிறுவர் இல்லம் கிளிநொச்சி.
மின்னஞ்சல் முகவரி: sencholai1992@gmail.com
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (47870)(7.6.3)

## VACANCIES

### SALES EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

SALES EXECUTIVE

**Requirements**

* GCE (A/L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil

**Benifits**


- An attractive salary
- Travelling allowances
- Commissions payments
- Telephone facilities
- Motorbike allowances
- Incentive & Overseas trips for target achievers
- Career development (Management position)

**If you believe that you are the right cantidate,**
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerhouse@gmail.com (51786)(12.3.6)

# யாழ்ப்பாணத்தில் புதிதாக காலடி எடுத்து வைக்கும் விமானத்துறை வேலைவாய்ப்புப் பயிற்சிகள்



உயர்கல்வி படிக்க திட்டமிடுபவர்களும் சரி, மற்றும் தமது பிள்ளைகளை உயர்கல்விக்கு அனுப்ப திட்டமிடும் பெற்றோரும் சரி, முக்கியமாக கவனிக்கும் சில விடயங்கள் எவை? குறிப்பட்ட துறையில் கல்வி கற்றால், வேலை கிடைக்குமா? நல்ல ஊதியம் கிடைக்குமா? எந்த நாட்டுக்குப் போனாலும், அந்தக் கல்வியை வைத்து, வேலை எடுக்க முடியுமா? என்பவை பிரதான விடயங்கள். மற்றொரு முக்கிய விடயம், அந்தத் துறையில் எப்போதும் வேலை இருக்குமா? என்பது.

ஏவியேஷன் (விமான) துறையை எடுத்துக் கொண்டால், எப்போதுமே கேள்வி உள்ள ஒரு துறை. காரணம், வர்த்தக விமானங்கள் ஓடிக்கொண்டு இருக்கும்வரை, ஏவியேஷன் (விமான) துறையில் வேலைகள் இருந்து கொண்டே இருக்கும். உலக அளவில் விமானப் போக்குவரத்து கூடுகிறதே தவிர, குறைவதில்லை.

ஏவியேஷன் துறை, இலங்கையில் தமிழ் மக்களுக்கு புதிது. பெருமளவான எண்ணிக்கையில் தமிழர்கள் இல்லாத துறை. இதற்குக் காரணம், 30 ஆண்டுகளாக நடந்த போர் காரணமா, சிவில் விமானப் போக்குவரத்து என்பது நாட்டில் வளர்ச்சியடையவே இல்லை. அதுவும் யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டால், வளர்ச்சியளவு பூச்சியம்.

தற்போது, இந்த நிலை மாறத் தொடங்கியுள்ளது.

மிக விரைவில், பலாலியில் சர்வதேச விமான நிலையம் அமைய வாய்ப்பு உள்ளது. இதற்குக் காரணம், இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் வரும் பயணிகளில் 40 சதவீதமான பயணிகள், வடமாகாணத்துக்கு வருகிறார்கள். அதாவது, கொழும்பு வந்து, அங்கிருந்து தரை மார்க்கமாக வடக்கே வருகிறார்கள்.

வெளிநாடுகளில் இருந்து பலாலிக்கு நேரடியாக விமானங்கள் வந்தால், இவர்கள் இங்கேயே வந்து இறங்கவே விரும்புவார்கள் என்பது வர்த்தக விமான நிறுவனங்களுக்குத் தெரியும். இதனால், விமான நிறுவனங்கள், பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமானநிலையம் ஆக்க அழுத்தம் கொடுக்கிறார்கள்.

சரி. அப்படி நடக்கும்போது, பலாலி விமான நிலையத்தில் பணிபுரிய ஆட்களுக்கு எங்கே போவது? விமானத்துறையில் பயிற்சிபெற்ற எத்தனைபேர் இங்கே உள்ளார்கள்? விரல்விட்டு எண்ணும் அளவில்கூட கிடையாது. இதனால், இந்தத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் யாராவது இருந்தால், அவர்களுக்கு கேள்வி அதிகமாக இருக்கும்.

அதுவும், சர்வதேச விமான நிறுவனங்கள் தமது விமான சேவைகளுக்காக ஆள்களை வேலைக்கு எடுக்கும் போது, அவர்கள் கொடுக்கும் சம்பளமும், இதர சலுகைகளும் கவர்ச்சிகரமானவை. வெளிநாட்டு நிறுவனங்கள் அப்படி கொடுத்தால், இலங்கையின் தேசிய விமான நிறுவனம் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் அதேயளவு கொடுக்க வேண்டியிருக்கும்.

யாழ்ப்பாணத்தில், முதல் தடவையாக இந்தப் பயிற்சிப் புரோகிராம்கள் மானிப்பாய், ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் இம்மாதம் தொடங்கப்பட உள்ளன. அதற்கான நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமை, ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் விமானத்துறைப் பிரிவு அலுவலகத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளன.

முதலாவது வகுப்பில், குறைந்த, மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மாணவ, மாணவிகளே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதனால், நேர்முகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ மாணவிகளே, பயிற்சி வகுப்பில் இணைத்துக்கொள்ளப்படுவர்.


இந்தப் பயிற்சி, சர்வதேச விமானத்துறை சூழ்நிலையிலேயே நடைபெறவுள்ளது. இதற்காக ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையில் 4 ஆவது மாடியில் விமானத்துறைக்காக பிரத்தியேக பயிற்சி மையம் அமையவுள்ளது. பயிற்சியாளர்கள் விமான நிறுவனப் பாணியிலான சீருடை அணிய வேண்டியிருக்கும். திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 தொடக்கம், மதியம் 2.30 வரை வகுப்புகள் நடைபெறும்.

## நல்லூர் திருவிழாக் காலத்தில் செலான் வங்கியின் திட்டங்கள்

நல்லூர் திருவிழா காலத்தில் யாழ். செலான் வங்கியால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் நன்மை பெறும் நோக்கில் பல சிறப்பான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் கலாசார விழுமியங்கள் சார்ந்ததாகவும் வியாபாரத்தை மையப்படுத்தியதாகவும் அமைந்திருந்தன. நல்லூர் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களுக்கான கலாசார விழுமிய செயற்பாட்டினுள் ஆலயத்துக்கு வரும் விதிமுறைகள், ஆடை அலங்காரங்கள், விழிப்புணர்வுத் தகவல்கள் போன்றவை தொடர்பிலான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அத்துடன் உற்சவ காலத்தில் தினமும் ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்குப் பிரசாதங்களும் வழங்கப்பட்டன. இதற்காக செலான் வங்கியின் யாழ்ப்பாணக் கிளைகளை சேர்ந்த 100 வங்கி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதேபோன்று வங்கி சார்ந்த செயற்பாடுகள் பற்றிய விளக் கங்கள், வங்கிக் கணக்கு வகைகள், வங்கி சார்ந்த நடமாடும் சேவைகள், வட்டி வீதங்கள் போன்ற தகவல்களுடன் கூடிய பூரணமான விளக்கங்களும் கூடத்துக்கு வருபவர்களுக்கு வழங்கப்பட்டன. தேர்த்திருவிழாவின் போது 1000 பக்தர்களுக்கு செலான் வங்கியின் அனுசரணையில் மாபெரும் அன்னதானமும் வழங்கப்பட்டது. இதுபோன்ற செயற்றிட்டங்கள் வற்றாப்பளை, மடு உள்ளிட்ட பல சமய திருத்தலங்களிலும் செலான் வங்கியால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (த)




## ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனம் மன்னாரில் கடற் பாசிச் செய்கை

இலங்கையின் வறிய மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் தொழில் வாய்ப்புக்களை ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனம் வழங்கி வருகின்றது.

ஹேலீஸ் கூட்டு நிறுவனங்களின் வேளாண் வணிக அங்கமான ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனம் அண்மையில் மன்னார் கடற் களப்பில் கடற்பாசி வளர்ப்பைத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் வடமேற்குக் கரையோரத்தில் தொடங்கியுள்ள இந்தச் செயற்றிட்டத்தால் மீனவக் குடும்பங்களுக்கு நன்மை. ஏனெனில் உலகளவில் கடற் பாசியிலிருந்து உற்பத்தியாகும் உணவுப் பொருள்களுக்கு விலை மதிப்பு ஏறுமுகமாக உள்ளது.

குறிப்பிட்ட வகைக் கடற்பாசியை இயற்கையாக வளர்த்து அறுவடை செய்வதால் வடமேற்குக் கரையோரத்தில் உள்ள மீனவக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

இந்தச் செயற்றிட்டத்தில் இணையும் மீனவர்களுக்கு பாசி விதைகள், வளர்ப்பு மிதவைகள், உலர்த்தல் தட்டுகள் ஆகியன கிடைக்கும். வளர்ப்பு, அறுவடை, உலர்த்தல் ஆகியவற்றில் முழுமையான பயிற்சியும் கிடைக்கும்.

பூநகரியில் வலைப்பாடு, நாச்சிக்குடா ஆகிய பிரதேசங்களிலுள்ள வறிய மீனவக் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குத் தொழில் வாய்ப்பு உண்டாகும். அந்தப் பெண்கள் மேலதிக வருவாயை ஈட்டிக் குடும்ப வரு வாயைப் பெருக்குவர். இயற்கையாகக் கடற்பாசியை வளர்க்கலாம். அறுவடை செய்யலாம். வெயிலில் உலர்த்தலாம். அவற்றுக்கு ஏற்ற பொருத்தமான கால நிலை மன்னார் கடற் களப்பில் உண்டு. எனவே மன்னார் கடற் களப்பு மீனவர் வளம் பெருக்குவர்.

பூநகரியில் வளர்த்த கடற்பாசியை அறுவடை செய்து, உலர்த்தி, அந்த உலர்ந்த பாசியின் முதற் தொகுதியை ஏற்றுமதி செய்யும் நிகழ்வு ஓகஸ்ட் 21 இல் கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரான டாக்டர் ராஜித சேனா ரத்ன கலந்து கொண்டு, உரையாற்றுகையில் "இந்தத் தொழிற்பாடுகளின் தொடக்கமே இலங்கையின் மீன் வளத் தொழிற்றுறையில் புதியதொரு அத்தியாயமாகும். மீனவர் மீனைப் பிடிப்பதிலேயே தங்கியிராது நீர்வளம் சார்ந்த புதிய முயற்சிகளில் காலடி எடுத்துப் புதிய யுகத்துள் செல்ல இம்முயற்சி வழிகோலியுள்ளது.

நீர் வளம் பெருக்கும் முயற்சியில் ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தார் முதலிட்டுள்ளனர். 30 ஆண்டுகளாகப் போரினால் சீரழிந்த வடக்கு மக்களுக்கும், தேசத்துக்கும் கைகொடுக்க முன் வந்தமைக்காக ஹேலீஸ் நிறுவனத்துக்கு இத்தேசம் நன்றி பாராட்டுகிறது என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஹேலீஸ் கூட்டு நிறுவனங்களின் பணிப்பாளர் சபைத் தலைவர் மொஹான் பண்டிதகே அவர்கள், இலங்கையின் கரையோரமெங்கும் பரந்து வாழும் கடற்றொழிலாளரின் வாழ்வாதாரங்களை உயர்த்தும் திட்டமிது. இலங்கையின் அந்நியச் செலாவணியை ஈட்டும் திட்டமிது. இலங்கையை வணிகத்தில் மேம்படுத்தும் திட்டமிது. இலங்கையின் பொருளாதாரத்தை ஏற்றும் திட்டமிது.

இதுவே ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் திட்ட இலக்கு. ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் இந்தியப் பங்காளரான அக்குவா அக்ரி நிறுவனம் இதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. ஏற்றுமதிச் சந்தைப்படுத்தலுக்கு வழிகாட்டுகிறது. உலர்ப் பாசியின் தரமதிப்பை உயர்த்தவும் உதவுகின்றது" என்று குறிப்பிட்டார். (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா மனித உரிமைகள் சபையின் 27ஆவது கூட்டத்தொடரும் எதிர்பார்ப்புகளும்

நாளையதினம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 27 ஆவது கூட் டத் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் இடம் பெறவுள்ளது.

இறுதிப் போரில் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தற்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் மேற் கொள்ளப்பட்டு வரும் விசாரணை கள் குறித்த வாய்மூல அறிக்கையை ஐ.நா. மனித உரி மைகள் சபையின் புதிய ஆணையாளராக பதவி யேற்றுள்ள இளவரசர் செயித் அல்-ஹுசைன் எதிர்வரும் 24ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார். இலங்கையின் குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வில் திருப்புமுனையாக பார்க்கப் படும் ஐ.நா. விசாரணையின் பரிமாணத்தை அறிய ஆவல் கொண்டுள்ளவர்களுக்கான ஆரம்ப சமிக்ஞைகளை ஐ.நா. ஆணையாளரின் வாய்மூல அறிக்கையிலிருந்து பெற்றுக் கொள்கின்ற வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன.

இலங்கை விவகாரத்தை எந்த சக்தியினதும் அழுத்தங் களுக்கு அடிபணியாது மிகவும் நேர்த்தியாக தொழில் ரீதியாக நிபுணத்துவ ஆற்றலை உள்வாங்கி முன்னகர்த்திய முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இடத் திற்கு வந்துள்ள புதிய ஆணையாளர் பணியெனவரும் போது எத்தகைய உறுதியைப் கடைப்பிடிப்பார் என்ப தைக் கோடிட்டுக்காட்டுவதாக அவரது வாய்மூல அறிக்கை யில் உள்ளடக்கப்படும் விடயதானங்கள் அமையக்கூடும்.

இதேவேளை நாளையதினம் 27ஆவது கூட்டத் தொட ரின் ஆரம்ப அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் ஆரம்ப உரையை நிகழ்த்தும் போதும் இலங்கை விவகாரம் குறித்து கருத்துக்களை முன்வைக்கக் கூடும். ஐ.நா. விசா ரணைக்கு சாட்சியமளிக்க முன்வருபவர்களை அச்சுறுத் தும் வகையில் அரசும் அதன் ஆதரவாளர்களும் மேற்கொள் கின்ற செயற்பாடுகள் மனித உரிமை ஆர்வலர்கள், தன் னார்வ தொண்டு நிறுவனப்பிரதிநிதிகள் மற்றும் அரசசார் பற்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மீதான அவதூறுச் செயற்பாடுகள், அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் புதிய ஆணையாளர் தனது ஆணித்தரமான கருத்துக்களை பதிவுசெய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மீதான ஐ.நா. விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று தீர்மானித்து செயற்படுகின்ற இலங்கை அரசாங்கம் கூட மனித உரிமைகள் சபையின் 27ஆவது கூட்டத்தொடரை இலக்குவைத்து காய்களை நகர்த்துகின்றமை அடி மனதில் அரசாங்கத்திற்கிருக்கின்ற அச்சங் களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

புதிய ஆணையாளர் தொடர்பில் தமக்கு நம்பிக்கை உள்ளதென அரச தரப்பில் வெளியிடப்பட்ட கருத்துக் கள் எந்தளவிற்கு நவநீதம்பிள்ளையின் நடவடிக்கைக ளால் அரசு கலங்கிப்போயுள்ளது என்பதை புலப்படுத் துகின்றது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணையை போர்க் குற்றங்களையும் விசாரணை செய்யத்தக்கதாக விஸ் தரித்தமை, அந்த ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச நிபுணர்களை நியமித்தமை என்பன ஐ.நா. கூட்டத் தொடரை இலக்குவைத்து குறிப் பாக தற்போது முன்னெடுக்கப்படும் ஐ.நா. விசார ணையின் தாக்கத் தையும் காத்திரத்தன் மையையும் குறைக்கும் நோக்கை உடையன என்பதை நிபுணர்கள் பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

சமாந்தரமான முறையில் உள்நாட்டுப் பொறிமுறையும் ஐ.நாவின் சர்வதேசப் பொறிமுறையும் போர்க் குற்ற மற் றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை-களில் கடைப்பிடிக்கப்படவேண்டும் என கடந்த மார்ச் மாதத்தில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் திற்கு அமைவாகவே நடவடிக்கைகளை மேற்கொண்ட தாக அரசாங்கம் வாதிட முனைந்தாலும் அதன் கடந்த கால வரலாறுகளோ தற்போதைய நடவடிக்கைகளை காலத்தைத் இழுத்தடிப்பதற்கான கண்துடைப்பு செயற் பாடுகளாக நோக்கத் தோன்றுகின்றன.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதும் அனைத் துப்பிரச்சினைகளும் முடிவடைந்துவிட்டதாக மார் தட்டிய அரசு ஒருபோதுமே இலங்கை தொடர்பில் ஐ.நாவின் சர்வதேச விசாரணை இடம்பெறும் என எதிர்பார்த்திருக்கவில்லை. இன்று பல படிகளைத் தாண்டி ஐ.நா. விசாரணை நடைமுறைச்சாத்திய மாகி யுள்ள நிலையில் அதன் முடிவுகள் நாட்டின் எதிர் காலத்தை தீர்மானிப்பதில் பெரும் தாக்கத்தைச் செலுத் தும் வாய்ப்புண்டு.

# இந்தியாவின் புதிய நகர்வு அச்சத்தில் இலங்கை அரசு

கந்தவனம் கோணேஸ்வரன்

அரசியற்கோமாளி சுப்பிர மணிய சுவாமியின் ஆருடத் தையும் மீறித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பு கடந்தவாரம் டில்லியில் இடம் பெற்றிருக்கிறது. இந்திய அரசின் அழைப் பின்பேரில் கடந்த வியாழனன்று டில்லி சென்ற தமிழ்த் தலைவர்கள், வெள்ளி யன்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜைச் சந்தித்து இலங் கைத் தமிழர்களின் நிலைமைபற்றித் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். சனிக்கிழமையன்று ஒருமணி நேரத் துக்கும் அதிகமாக நரேந்திர மோடியு டன் பேசிய தமிழ்த் தலைவர்கள் தமது சந்திப்பு பயனுடையதாக அமைந்திருந் தது என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பாரதப் பிரதமர் ஒருபோதும் சந்திக்க மாட்டார் என்று சுப்பிரமணிய சுவாமி இலங்கை அரசுக்கு வாக்குறுதி வழங் கிச் சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்த வேளையில்தான் இச்சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது. நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அவருடன் கூடச்சென்று கலந்துகொள் ளாதது வடக்கு முதலமைச்சரின் பிழை யான நடவடிக்கை யென்று விமர்சனம் செய்துகொண்டிருந்த அரச ஆதரவாளர் களின் முகத்தில் கரியைப் பூசினாற் போல, வடக்கு முதலமைச்சர் விக்னேஸ் வரனை விரைவில் சந்தித்து அவருடன் உரையாட விரும்புவதாக நரேந்திர மோடி தெரிவித்திருக்கிறார்.

இந்தியப் பிரதமரின் அக்கறை இலங் கைத் தமிழர்களிடையே ஒரு மெல்லிய உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை அரசின் தமிழர் வதைப்புக் குத் துணைநின்ற மன்மோகன் சிங் கின் ஆட்சி மாறியதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் விடயத்திலும் டில்லியின் பார்வை மாற்றம் பெற்றுள் ளது. அரசுகள் மாறலாம்; வெளியு றவுக்கொள்கைகள் மாறமாட்டா என்ற கோட்பாட்டு ரீதியான விளக்கங்கள் மூலம் தமிழர்களின் போராட்ட உணர் வுகளைக் கொச்சைப்படுத்தியும் அச்சப் படுத்தியும் செய்யப்பட்டு வந்த பரப் புரைகள் தகர்ந்து போயிருக்கின்றன. ஒரு நாட்டின் ஆட்சி மாறினாலும் அந் நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் மாற்றமடைவதில்லை என்பதில் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

இந்த அடிப்படையில்தான் இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையீட்டை நோக்க வேண்டும். அண்டைநாட்டு உள்விவகாரங்களில் தலையிட மாட் டோம் என இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் சொல்வது முற்றுமுழுக்கச் சரியானால் 1983இல் இனக்கலவரம் நிகழ்ந்தவுடன் இந்தியத் தூதுவர் பார்த்தசாரதி இலங்கைக்கு வந்திருக்கமுடியாது. இலங்கையின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கிய பூமாலை நடவடிக்கை 1987இல் இடம் பெற்றிருக்காது. இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கான போர்ப் பயிற்சி இந்தியாவில் இடம்பெற்றிருக்க வாய்ப் பில்லை. இப்போது நாம் பேசிக் கொண் டிருக்கும் மாகாணசபைகள் சட்டம் என அழைக்கப்படும் பதின்மூன்றாம் திருத் தச்சட்டம்கூட இந்திய அரசின் அழுத்த மான தலையீட்டால் ஏற்பட்டதுதான்.

தமிழர்களுக்குச் சாதகமான முறையில் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்துவந்த இந்தியா, ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதன்பின் தமிழர் களுக்குப் பாதகமான தலையீடுகளை இலங்கையில் செய்யத்தொடங்கியது. இத்தலையீடுகளுக்குப் பயங்கரவாத ஒழிப்புக்கான உதவியென்றும், அரசு

**டில்லி அரசு தமிழக அர சின் கோரிக்கைகளை உதாசீனம் செய்வதற்கான வாய்ப்புகள் நிறையவே காணப்பட்டன. இந்தப் பலவீனங் களைப் பயன்படுத்தியே இலங்கை அரசு முள்ளி வாய்க்கால் அவலத்தை வெற்றிக ரமாக நடத்திமுடித்தது.**

என்ற ரீதியில் இலங்கை அரசுக்குத் தரப் படுகின்ற ஆதரவு என்றும் இராஜதந்திரப் பெயர்கள் சூட்டப்பட்டன. தன் கண வரைக் கொன்றவர்களைப் பழிவாங்கு வதற்காக சோனியா காந்தி போட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தச் செயற்பாடுகள் வகுக்கப்பட்டிருந்தன.

இந்தியாவின் இத்தகைய இருவிதமான நிலைப்பாடுகளும் உண்மையில் இலங்கை மீதான தலையீடுகள்தாம். ஒன்று, அரசுக்கு விருப்பமில்லாமல் நடந் தது, மற்றையது தமிழர்களுக்கு விருப் பமில்லாமல் இடம்பெற்றது. வேறொரு வகையில் சொல்வதானால் முதலாவது செயற்பாடுகளைத் தமிழர்கள் விரும்பியி ருந்தார்கள். இரண்டாவது செயற்பாடு களை இலங்கை அரசு விரும்பி வர வேற்றிருந்தது. அரசு விரும்பினால் அவை உதவிகள் என்றும், அரசு விரும்பா விட்டால் அவற்றை அத்து மீறிய செயற் பாடுகள் எனவும் அர்த்தம் கொள்வது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது.

இந்த அடிப்படையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களைப் பாரதப் பிரதமர் அழைத்துப் பேசியிருக் கிறார். போரின் முடிவில் தமிழர்கள் வகைதொகையின்றி அழிக்கப்பட்டனர். தமிழர்கள் அழிக்கப்பட்டதன்பின்னர் இலங்கை ஜனாதிபதி உலக நாடுக ளுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளை யும் நிறைவேற்ற முன்வரவில்லை. இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதி களையும் உதாசீனம் செய்தார். தொடர்ந்தும் உலக நாடுகளை ஏமாற்றி விடலாம் என்ற நிலைப்பாட்டிலேயே இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது. பிரதமர் நரேந்திர மோடியின் பதவி யேற்பு நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட இலங்கை ஜனாதிபதியிடம் பதின்மூன் றாம் திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு நரேந்திர மோடி கோரியிருந்தார். ஜனாதிபதியும் உடன் பட்டிருந்தார். ஆனால், இன்றுவரை எவையும் நடைமுறைக்கு வரவில்லை. இந்தக் காரணங்கள்தாம் இலங்கை யின் உள்விவகாரங்களில் இந்தியா மீளவும் தலையிடுவதற்கு வழிவகுத் திருக்கின்றன.

நரேந்திர மோடி இந்தியாவின் செல் வாக்கை உயர்த்துவதிலும் அதன் பாதுகாப்பைப் பலப்படுத்துவதிலும் மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அம் மையாரைப்போல் திடமான போக்குடன் நடந்துகொள்வார் என்றே எதிர்பார்க்கப் படுகின்றது. அந்நியர் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுபட்ட காலந்தொடக்கம் இந்தியாவுக்கு அருகில் இருந்துகொண்டு அதற்கெதிரான போக்குகளைக் கைக் கொள்கின்ற நாடுகளாக பாகிஸ்தானும், இலங்கையும் இருந்துவருகின்றன. இவை இரண்டும் சீனாவுடன் இணைந்து கொண்டு இந்திய நலன்களுக்கு எதிரா கத் தொடர்ந்தும் செயற்பட்டுவருவ தாகவே இந்திய அரசால் நோக்கப்ப டுகின்றன. இதனடிப்படையில் பாகிஸ்தா னில் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடி களைச் சாதகமாகப் பயன்படுத்திய இந் திரா காந்தி தனது படைகளை அனுப்பி பாகிஸ்தானை இரண்டாக உடைத் தெறிந்து பங்களாதேஷ் எனும் நாட்டை உருவாக்கிக் கொடுத்தார்.

இலங்கையும் ஸ்ரீமாவோ அரசின் காலத்திலிருந்து இந்தியாவுக்கு விரோத மான நகர்வுகளையே தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்தியாவுக் கும் பாகிஸ்தானுக்கும் போர் மூண்ட சமயத்தில் பாகிஸ்தான் படையினரின் வான்வழிப் பயணத்தை இந்தியா தடை செய்திருந்தது. இந்நிலையில், பாகிஸ் தான் படையினர் மேற்குப் பகுதியிலி ருந்து கிழக்குப் பகுதிக்கான நகர்வு களை மேற்கொள்வதற்கான வான் பாதையை இலங்கையே வழங்கியிருந் தது.

பிற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழர்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் களைத் தோற்றுவித்தன. இவற்றை இலங்கை அரசு சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டது. அப்போதிருந்த தமிழக ஆட்சியாளர்களின் பதவிமோகம், ஊழற்போக்கு என்பவை காரணமாக டில்லி அரசு தமிழக அரசின் கோரிக்கை களை உதாசீனம் செய்வதற்கான வாய்ப் புகள் நிறையவே காணப்பட்டன. இந்தப் பலவீனங்களைப் பயன்படுத்தியே இலங்கை அரசு முள்ளிவாய்க்கால் அவ லத்தை வெற்றிகரமாக நடத்திமுடித்தது.

பிராந்திய வல்லரசான இந்தியாவைத் தன்பக்கம் வைத்துக்கொண்டால் எவரை யும் இலகுவாக எதிர்த்து ஏமாற்றிவிடலாம் என்று நம்பியிருந்த இலங்கை அரசுக்கு இந்தியாவின் புதிய நகர்வு அச்சத்தைத் தோற்றுவித்திருக்கிறது. இந்த அச்சம் கார ணமாகத்தான் ஜனாதிபதியும் வழக் கத்துக்கு மாறாகச் சீறிப்பாய்ந்திருக்கிறார். தமிழர்கள் எங்கு சென்றாலும் தங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இறுதியில் தன்னிடம்தான் பேசியாகவேண்டும் எனக் கடுமையாகவும் எச்சரித்திருக்கிறார்.

முற்போக்கு அமைச்சரென பெயரெடுத்த வாசுதேவ நாணயக்கார படுபிற்போக்குத் தனமாகத் தன் கருத்துகளைக் கொட்டி யிருக்கிறார்.

அரசியல் தீர்வுக்காக இந்தியா செல்ல வேண்டாம் எனக்கூறும் அமைச்சர்கள் உள்நாட்டிலேயே தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். அந்த நடவடிக் கைகள் தமிழ் மக்களுக்கு தெளிவாகத் தெரிவித்திருக்கவேண்டும். அம்முயற்சி களின் பலன்களை ஓரளவாவது தமிழ் மக்கள் அனுபவிக்கத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் நடந் ததாக இல்லை. பேசிப்பேசியே காலத்தை ஓட்டிவரும் அமைச்சர்கள் தமிழ் மக்க ளுக்கு அறிவுரை கூற முன்வருவதில் எவ்வித நியாயமுமிருப்பதாகத் தெரிய வில்லை. இவர்களை முன்னோக்குச் சிந்தனையாளர்கள் எனத் தமிழர்கள் நம்புவதிலும் பயனில்லை.

இந்தியாவின் சாதகமான அணுகுமுறை யைச் சரியான வழியில் பற்றிக்கொள்ள வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இருக்கி றது. நரேந்திர மோடியுடனான சந்திப்பு எத்துணைப் பெறுமதி வாய்ந்ததோ அதற்கு நிகரான பெறுமதி வாய்ந்தது தமிழக முதலமைச்சருடனான சந்திப்பும் என்பதை மனதிற்கொண்டு அவருட னான சந்திப்புகளை மேற்கொண்டு தமி ழர்கள் விடுதலைபெற உதவி கேட்க வேண் டிய பொறுப்பும் தமிழ்த் தலைவர் களுக்கு இருக்கிறது. மத்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்த அணுகுமுறைகளைக் கொண்டிருந் தாலுங்கூட தமிழக மக்கள் எப்போதும் எங்கள் உணர்வுடனேயே ஒன்றி வாழ்கிறார்கள் என்பதை நிராகரித்துவிட முடியாது. தமிழக உணர்வுகளின் வெளிப்பாடுகள்தான் மத்திய அரசின் செயற்பாடாக மாற்றமடைகிறது என்ப தையும் நாம் மறந்துவிட முடியாது.

தமிழ் மக்களின் அடிப்படை விருப்பங் களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் தமது செயற்பாடுகளின் நியாயங் களையும் மனத்தூய்மையுடன் உணர்ந்து நேர்மையான வழியில் அணுகி அவற்றை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு இருக்கிறது.


# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 183




## மலச்சிக்கல்

எந்த வயதினரையும் பாதிக்கும் ஒரு பொதுவான பிரச்சினையாக மலச்சிக்கல் காணப்படுகின்றது. ஒருவர் தனது வழமைக்கு அதிகமான நாள்கள் மலங்கழிக்க முடியாமல் இருக்கும்போதோ அல்லது மிகக் கடினமான மலத்தை கழிக்கும் போதே அல்லது முழுமையாக மலங்கழிக்க முடியாமல் இருக்கும் போதும் மலச்சிக்கல் எனக் கருதப்படுகின்றது.

இன்றைய நவீன வாழ்க்கை முறையே அதாவது போதியளவு நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ளாமை, போதியளவு நீர் குடிக்காமை, போதியளவு உடற்பயிற்சியின்மை மற்றும் மலங்கழிக்க வேண்டிய தேவை ஏற்படுமிடத்து அதனைப் பிற்போடுதல் போன்றவையே மலச்சிக்கலுக்கான முக்கிய காரணங்களாகும்.



உளவியல் பிரச்சினைகளும் மலச்சிக்கலை ஏற்படுத்தலாம். நீண்ட கால மலச்சிக்கல் சில நோய்களுக்கான அறிகுறியாகவும் இருக்கலாம். உதாரணமாக பெருங்குடல் புற்றுநோய், நீரிழிவு நோய், பார்கின்சன் நோய் தைரொட்சின் குறைபாடு, மன அழுத்தம் போன்றவை சில மருந்து குளிகைகளின் பக்க விளைவாகவும் மலச்சிக்கல் ஏற்படலாம்.


நீண்டகாலமாக மலச்சிக்கல் காணப்படுமிடத்து அதனால் வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மல அடைப்பு திரவ மலக் கசிவு, மூலநோய் போன்றன அவற்றுள் சிலவாகும்.


இடைக்கிடையே குறுகிய கால மலச்சிக்கல் ஏற்படுமாயின் வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதிலிருந்து விடுபடலாம். அவையாவன அதிக நார்ச்சத்துள்ள உணவுப் பொருள்களை (பழங்கள், மரக்கறி, கீரைவகை) சேர்த்தல், போதியளவு நீர் (நாளொன்றுக்கு 1.5 லீற்றர் தொடக்கம் 2 லீற்றர் வரை) அருந்துதல், தினம்தோறும் உடற்பயிற்சி மற்றும் மலங்கழிக்க வேண்டிய உந்துதல் ஏற்படும் நேரத்தில் தாமதிக்காமல் மலங்கழித்தல் என்பவையாகும்.

நீண்ட கால மலச்சிக்கல் காணப்படுமிடத்து அல்லது காய்ச்சல் மற்றும் வயிற்று வலி ஏற்படுமிடத்து அல்லது மலத்துடன் குருதி கலந்து வெளியேறுமிடத்து வைத்திய ஆலோசனையை நாடுவது அவசியமாகும்.

மருத்துவர் சி.சகிலா,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.







## பாம்புக்கடிக்கான முதலுதவி


ஒருவரைப் பாம்பு கடித்துவிட்டால் அவரையும், உங்களையும் பாம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கடித்த பாம்பை நன்கு அடையாளம் காண முயலுங்கள். இதனால் எவ்வகையான பாம்பு என அறிந்து, அதற்கேற்ப சிகிச்சை அளிக்க வைத்தியருக்கு உதவியாக இருக்கும். பாம்பை இனங்காணுவதில் அதிக நேரத்தைச் செலவழிப்பதையோ அல்லது அந்த முயற்சியில் மீண்டும் கடிவாங்குவதையோ தவிர்க்கவும்.

பாம்பால் தீண்டப்பட்டவரைக் குறைந்த அசைவுடன் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றவும் அத்துடன் கடிக்கு இலக்கான நபரை அமைதியாக வைத்திருக்கவும். (அதிக அளவு அசைவும் மன உளைச்சல், அதிர்ச்சி என்பன இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தும். இது பாம்பின் விஷம் உடல் முழுவதும் பரவுவதற்கு ஏதுவாகிவிடும்)

- ♦ தீண்டப்பட்ட அவயம் இதய மட்டத்துக்குக் கீழே வைத்திருக்கக்கூடியவாறு பார்த்துக் கொள்ளவும். இதுவிஷம் பரவுதலைத் தடுக்கும்.
- ♦ தீண்டப்பட்ட அவயத்திலிருக்கும் நகைகளையும் (உதாரணம்- காப்பு, மோதிரம்) மிக இறுக்கமான ஆடைகளையும் அகற்றவும்.
- ♦ தீண்டப்பட்ட பகுதி சவக்கார நீரால் மெதுவாகக் கழுவப்பட வேண்டும் (தோல் மேற்பரப்பிலிருக்கும் விஷத்தை நீக்குவதற்காக)
- ♦ தீண்டப்பட்ட இடத்துக்கு இரண்டு அங்குலம் மேலே துணியால் அல்லது பட்டியால் இறுகக் கட்டவும். வீங்கியிருந்தால் வீக்கத்துக்கு இரண்டு அங்குலம் மேலே கட்டவும்.
- ♦ கட்டப்படும் பட்டி குறைந்தது ஒரு அங்குலம் தடிப்பானதாகவும், கட்டு இறுக்கமானதாகவும் இரத்த ஓட்டத்தை தடுப்பதாகவும் இருக்க வேண்டும். கட்டப்பட்ட பட்டியை வீக்கத்துக்கு ஏற்பத் தளர்த்தி விடவும்.
- ♦ தீண்டிய பாம்பு நன்கு விஷம் நிறைந்த பாம்பாயின் தீண்டப்பட்ட அவயவத்தைக் கட்டுத்துணியால் நன்கு சுற்றிக் கட்டவும். இதன் போது இதயத்துக்கு மிக அண்மையான இடத்தில் (proximal) ஆரம்பித்து விரல்களை நோக்கிச் சுற்றவும்.
- ♦ நோயாளிக்கு உண்பதற்கோ அல்லது குடிப்பதற்கோ எதனையும் வழங்கக்கூடாது. இருப்பினும் சில கொடிய விஷம் நிறைந்த பாம்புக்கடியால் கடுமையாக வலி ஏற்படும் போது வலி நிவாரணியாக இரண்டு பரிசிற்டமோல் குளிசைகளை மிகக் குறைந்தளவு நீருடன் கொடுக்கலாம்.
- ♦ வேறு யாரையாவது உதவிக்கு அழைக்கக் கூடியதாக இருப்பின் அவரது உதவியைக் கண்டிப்பாகக் பெற்றுக்கொள்ளவும்.
- ♦ முடிந்தளவில் மிக விரைவாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும்.
- ♦ வழங்கப்பட்ட முதலுதவியை வைத்தியரிடம் சொல்லவும். மற்றும் பாம்பு தீண்டியபோது நடந்தவற்றைத் தெளிவாக விவரிக்கவும்.

### தவிர்க்கப்பட வேண்டியவை



- ♦ காயம் பட்ட இடத்தை வெட்டுதலோ உறிஞ்சுதலோ தவிர்க்கப்பட வேண்டும்.
- ♦ கடித்த இடத்தைப் பனிக்கட்டியால் தடவுதல் தவிர்க்கப்படவேண்டும்.
- ♦ இரசாயனப் பொருள்களைக் காயத்தில் தடவுதல் தவிர்க்கப்படல் வேண்டும். கொண்டிஸ்போன்றவை இழையத்தில் சேதத்தை ஏற்படுத்தும்.
- ♦ ஆடைகளை அகற்றுதல் தவிர்க்கப்படவேண்டும். (மிக இறுக்கமானவற்றைத் தவிர)
- ♦ மதுபானம் வழங்க வேண்டாம். இது விஷ அகத்துறிஞ்சலை அதிகரிக்கும்.

1. பெருபான்மையான பாம்புகள் விஷம் அற்றவை அல்லது விஷத்தை உட் செலுத்த மாட்டாதவை எனவே நோயாளிக்குப் பயம் ஏற்படுவதைத் தடுக்கவும்.
2. பாம்பினது பல்லின் அடையாள விஷம் உள்ளே சென்றதற்கான ஆதாரம் அல்ல.
3. பாம்பு இறந்திருந்தால் அதனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும். இறந்த பாம்பு ஒரு மணிநேரம்வரை தெறிவில் செயற்பாட்டால் தீண்ட முடியும் என்பதால் மிகக் கவனமாக இருக்கவும்.

*Dr. திருமதி. பிரதீபனா செல்வகரன்,*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்.*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவு பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக்கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள்.

**மிதுனம்:** உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் நிம்மதி உண்டு. கவனமுடன் செயற்படப்பாருங்கள்.

**கடகம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிரார்த்தனைகள் நிறைவேறும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**சிங்கம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி நீங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**நாளை**

ஆவணி-23 திங்கட்கிழமை 08.09.2014
திதி: சதுர்த்தசி மு.ப.10.40 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ.05.13 வரை
சுபநேரம்: 12.04 - 01.34 வரை
இராகுகாலம்: 07.34-09.04 வரை
பூரணை விரதம்

**துலாம்:** ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** கடன் பிரச்சினைகள் தீரும். தந்தையாரின் உடல் நலம் சீராகும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**தனுசு:** சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம்.

**மகரம்:** குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகமாகும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வரக்கூடும். அவசர முடிவுகளை தவிர்க்கப்பாருங்கள்.

**கும்பம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து யோசிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**மீனம்:** நீண்ட நாளாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 3 | 4 | | 6 | 8 | 9 | |
| | | | 2 | | | 1 | 6 | |
| | | | | 7 | 8 | 2 | | |
| | | 8 | | 9 | 7 | | | 2 |
| 9 | | | | 3 | | | | 1 |
| 5 | | | 1 | 4 | | 6 | | |
| | | 1 | 7 | 6 | | | | |
| | 8 | 4 | | | 9 | | | |
| | 9 | 2 | 5 | | 1 | 7 | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 9 | 6 | 5 | 1 | 2 | 7 | 4 |
| 6 | 1 | 7 | 4 | 2 | 8 | 9 | 3 | 5 |
| 2 | 5 | 4 | 3 | 7 | 9 | 1 | 8 | 6 |
| 4 | 7 | 3 | 8 | 1 | 6 | 5 | 9 | 2 |
| 8 | 6 | 5 | 9 | 4 | 2 | 3 | 1 | 7 |
| 9 | 2 | 1 | 7 | 3 | 5 | 6 | 4 | 8 |
| 5 | 9 | 2 | 1 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 7 | 4 | 6 | 5 | 9 | 3 | 8 | 2 | 1 |
| 1 | 3 | 8 | 2 | 6 | 4 | 7 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

விசேட புலமைப்பரிசில் திட்டம் - 2014



பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு புலமைப்பரிசில்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்



Degree Courses
Undergraduate / Postgraduate
BA/BBA/MBA
(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகள்)

Hotel Management
- Diploma in Hotel Management
- Diploma in Travel and Tourism

Business Management
- Diploma in Business Management
- HND in Business Management

Special courses
- CMA (Certified Management Accountants) Level I Level II Level III
- Diploma in Business & IT
- Diploma in IT & English

English
1. Diploma in English
2. Certificate in Basic English/Spoken English
3. English for work
4. English Teachers Training

IT
1. Diploma in IT/ICT
2. Diploma in Multimedia
3. International Diploma in Computing
4. International Computer Driving Licence
5. Diploma in Computer Hardware & Networking

- பயிற்சியின் பின்னர் வேலைவாய்ப்புக்கள்
- உலகின் பிரபல பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகளில் உயர்கல்வி வாய்ப்புக்கள் (UK, Canada, USA, Australia)




பதிவுகளை மேற்கொள்வதற்கு
<Name><Address><Course Name>இனை Type செய்து 0775052643 எனும் தொலைபேசிக்கு SMS செய்யுங்கள்

LCBT London College of Business Technology
LCBT City Campus
No:120/6, Palaly Road, Jaffna. (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
021 221 7105 / 077 024 9071
330, Aanandapuram East, Kilinochchi. புதுக்குடியிருப்பு

edexcel

G.C.E (A/L) இன் பின்னர்...




இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாடநெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினை பெற்றுக் கொள்வதோடு 5 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.

அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது.

IELTS
Dip. in English

மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் ... ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack
உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

5 Certificates by BCAS | 2 Certificates from Edexcel, UK

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910 | E: info@bcas.lk
தொடர்புகளுக்கு 0777 102131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar



4rever SKIN NATURALS
By Chandhani Bandara
Price Rs. 650/=
புதிய வருகை
GOLD Fairness Day & Night Cream
Day & Night Cream
உங்களது பிரியமான 4rever மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லுங்கள்
4rever பெட்டியின் மேற்புறப் பக்கத்தை 4rever.Skin Naturals, No.287/2,B, Stanly Thilakaratna Mawatha, Nugegoda என்ற முகவரிக்கு உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
பெயர்:
முகவரி:
தொ.பே.இல:
தே.அ.அட்டை இல:
Make-up செய்யும் போது Foundation பூச்சாகவும் உபயோகிக்கலாம்.
Chandhani Bandara
4REVER FOUNDER & PROPRIETOR
(Cosmetologist)
ISO 9001:2008 CERTIFIED COMPANY
011 440 3283
shopping online
Visit: www.4everskinnaturals.lk




இல்லை
* வாழ்வின் எழுச்சி நன்மையாளர்களுக்கு மட்டும்
மீளச் செலுத்துதல் ஒரு வருடத்தின் பின்னர்
24 தவணைக் கட்டணங்களில் கொடுங்கள்
வருடாந்த வட்டி 4% மட்டுமே.
ரூ. 5000 தொடக்கம் 50,000 வரை
கேட்ட உடனே கைகளில் பணம்
இன்றே உங்களுடைய வாழ்வின் எழுச்சி பிரஜைகளுக்கான வங்கிக்கு சமூகமளியுங்கள்




யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!
24 கரட்டுக்கு ரூ. 42,000/-*
22 கரட்டுக்கு ரூ. 36,000/-*
ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் பெறுமதியான அன்பளிப்பு
எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு
* முன்னறிவித்தல் இல்லாமல் நகைகளை மீட்கலாம். * வாரத்தின் 7 நாட்களும் பி.ப. 6.00 வரை திறந்திருக்கும். * தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.
கெனிஸ்டன் 0777 716 986
செந்தூரன் 0774 361 833
சுரேஸ் குமார் 0773 384 981
மோகன்ராஜ் 0778 065 387
L B FINANCE
www.lbfinance.com
L B FINANCE GOLD LOANS

# வறண்ட நிலையில் வரணிக் குளங்கள் அலைந்து திரிகின்றன கால்நடைகள்

வரணி, செப்.7

வரணிப் பிரதேசத்தில் குளங்கள் பலவும் வற்றிய நிலையில் கால்நடைகள் அலைந்து திரிவதுடன் குளங்களை அண்டிய வயல் நிலங்களில் சிறு தானியப் பயிர் செய்வோரும் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்புட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த மாத ஆரம்பத்தில் கிராமங்கள் தோறும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தூர்ந்து போயுள்ள குளங்கள் தூர்வை அகற்ற வேண்டிய கிணறுகள் போன்ற தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இதேவேளை- இடைக்குறிச்சி மாவில் வெளியில் உள்ள சலவைத் தொழிலாளர்கள் பாவனையில் உள்ள குளம் முற்றாக நீர் வற்றிய நிலையில் குறித்த தொழிலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்வதில் நீர்ப் பாற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர்.

அந்தக் குளத்துக்கு அருகில் உள்ள வயல் நிலங்களில் சிறு தானிய பயிர் செய்வோரும் நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்.

தற்போது மழை பெய்தாலும் இது போதுமானதல்ல. கடந்த காலங்களில் குளங்கள் பல பிரதேச சபைகள் மூலம் உணவு வேலைத் திட்டத்தின் கீழ் உலக உணவுத் திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன.


தற்போது அந்தத் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. கடந்த 11 ஆம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அரச அதிபர் வறட்சி நிவாரணம் சார்பில் வேலைத் திட்டங்களுக்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், மேலும் போதிய நிதியை அரசு வழங்கத் தயாராக உள்ளதாகவும் கூறியிருந்தார். இந்த நிலையில் கிராமத்துக்கு ஒரு குளத்தையாவது புனரமைக்க அரச அதிபர், பிரதேச செயலர்கள், கமத் தொழில் அபிவிருத்தித் திணைக்களம் போன்றனவும் முன்னுரிமை கொடுத்து ஆவன செய்ய வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-122)


நாம் கவனம் செலுத்தும் உலகின் அதிமுக்கிய பொருளாதாரம்... உங்கள் தனிப்பட்ட பொருளாதாரம்.

உங்கள் தனிப்பட்ட பொருளாதாரமே உங்கள் நிதிசார் வாழ்க்கையின் அச்சாணியாகும். நீங்கள் பொன்னெனக் கருதும் உங்கள் குடும்பம், உங்கள் இல்லம், உங்கள் வாஞ்சைகள், உங்கள் தொழில், உங்கள் மரபுரிமைகள் முதலிய அனைத்தையும் அது உள்ளடக்குகின்றது. உங்கள் தனிப்பட்ட பொருளாதாரம் தனித்துவமானது. அடிக்கடி மாறக்கூடியது. ஆகவேதான், HSBC Premier இல் உள்ள நாம், உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்குப் பொருத்தமான தனிப்பட்ட பொருளாதார உதவிகளை வழங்குவதில் முக்கிய கவனத்தைச் செலுத்துகிறோம்.

உங்கள் தனிப்பட்ட பொருளாதாரத்தை நாம் எவ்வாறு மேம்படுத்த முடியுமென்பதை அறிந்துகொள்ள, எமது HSBC Premier நிலையங்களுக்கு வாருங்கள்.

அழையுங்கள்: 94 11 4 4722 72
பிரவேசியுங்கள்: www.hsbcpremier.lk



HSBC Premier

C-16402



நீங்களும் மருத்துவராக அரிய வாய்ப்பு.....

Study Medicine

USA | Canada | Australia | UK | Europe | Malaysia




MBBS Programmes
- Melaka Manipal Medical College (MMMC) - (India / Malaysia)
- International Medical University (IMU) - (UK / Aus/ NZ)
- Monash University - (Australia / Malaysia)

MD Programmes (Doctor of Medicine)
- Vitebsk State Medical University - (Belarus - Eastern Europe)
- Angeles University Foundation - (Philippines)
- St:George's University - (UK/ Granada/ USA)
- Riga Stradins University - (Latvia - Europe)

Jaffna Contact : Dr.Hezron
No 104, Palaly road,Jaffna.
Contact No - 0775828826
Head Office : No 111 1/2, Maya Avenue, Colombo 06.

PATHE STUDY MEDICINE
www.pathestudy.org



நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க தங்க கடன் சேவை
செலான் வங்கியில்...

செலான் தங்கநகை அடகுச் சேவை

24 கரட் தங்கப் பவுண் ஒன்றுக்கு ரூ. 35,000/-




இன்றே வாருங்கள்.. நம்பிக்கையும் பொறுப்பும் மிக்க சேவையின் வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளுங்கள்..!

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கிக் கிளைகளில் அல்லது, 011 200 88 88 www.eseylan.com

செலான் வங்கி

C-16498


உலகம் முழுதையும் சுதந்திரமாக வலம்வர E-tel வழங்கும்
வேகமான, உயர்தரம் வாய்ந்த ஸ்மார்ட் ஃபோன்கள்
5.0"
E-tel Curiosity 09
OCTA CORE
இலங்கையிலிருக்கும் ஒரே "ஒக்டா கோர்" புரொசசரை கொண்ட ஸ்மார்ட் ஃபோன்
கிகா ஹேர்ட்ஸ் 1.7 ஐ கொண்ட ஒக்டா கோர் அதிவேக புரொசசர்
(Octa Core 1.7GHz Processor)
HSPA/4GB ROM + 1GB RAM
5 அங்குல HD IPS டச் திரை
16M IPS வர்ணத் திரை
8MP பின் கமரா உடனான ஃபிளாஷ்
3MP முன்புற கமரா
டுவல் சிம்
32GB வரையிலான மெமரி சிப் இணைக்கும் வசதி (Micro SD Card)
2000 mAh பற்றரி
ரூ.29,900/-
ஸ்டான்ட் அப் Flip cover உடன்
ஸ்டான்ட் அப்
4.5"
E-tel Curiosity N3
QUAD CORE
கிகா ஹேர்ட்ஸ் 1.3 ஐ கொண்ட குவாட் கோர் அதிவேக புரொசசர்
(Quad Core 1.3GHz Processor)
4GB ROM + 512MB RAM
4.5 அங்குல டச் திரை
16M IPS வர்ணத் திரை
8MP பின் கமரா உடனான ஃபிளாஷ்
2MP முன்புற கமரா
டுவல் சிம்
32GB வரையிலான மெமரி சிப் இணைக்கும் வசதி (Micro SD Card)
1750 mAh பற்றரி
ரூ.21,900/-
Flip cover உடன்
5.0"
E-tel Curiosity i7c
DUAL CORE
கிகா ஹேர்ட்ஸ் 1.3 ஐ கொண்ட டுவல் கோர் அதிவேக புரொசசர்
(Dual Core 1.3GHz Processor)
4GB ROM + 512MB RAM
5 அங்குல டச் திரை
16M IPS வர்ணத் திரை
5MP ggd கமரா உடனான ஃபிளாஷ்
முன்புற கமரா
டுவல் சிம்
32GB வரையிலான மெமரி சிப் இணைக்கும் வசதி (Micro SD Card)
2000 mAh பற்றரி
ரூ.19,900/-
Flip cover உடன்
4.0"
E-tel Curiosity i6
DUAL CORE
கிகா ஹேர்ட்ஸ் 1.2 ஐ கொண்ட டுவெல் கோர் புரொசசர்
(Dual Core 1.2GHz Processor)
4 அங்குல டச் திரை
16M வர்ணத் திரை
4GB ROM + 512MB RAM
HSPA 21 Mbps
5MP பின் கமரா உடனான ஃபிளாஷ்
முன்புற கமரா
டுவல் சிம்
32GB வரையிலான மெமரி சிப் இணைக்கும் வசதி (Micro SD Card)
1500 mAh பற்றரி
ரூ.15,900/-
4.0"
E-tel Curiosity i5c
DUAL CORE
கிகா ஹேர்ட்ஸ் 1.2 ஐ கொண்ட டுவெல் கோர் புரொசசர்
(1GHz Cortex Processor)
512MB RAM
4 அங்குல டச் திரை
16M IPS வர்ணத் திரை
5MP பின் கமரா + 1.3MP முன்புற கமரா
டுவல் சிம்
32GB வரையிலான மெமரி சிப் இணைக்கும் வசதி (Micro SD Card)
1450 mAh பற்றரி
ரூ.11,990/-
Flip cover உடன்
3.5"
E-tel Curiosity i4
கிகா ஹேர்ட்ஸ் 1.0 ஐ கொண்ட Cortex புரொசசர்
(1GHz Cortex Processor)
3.5 அங்குல HVGA டச் திரை
256MB RAM
HSPA 21 Mbps
வீடியோ கோல் / ஸ்கைப் கோல்
2MP பின் கமரா + முன்புற கமரா
டுவல் சிம்
32GB வரையிலான மெமரி சிப் இணைக்கும் வசதி (Micro SD Card)
1500 mAh பற்றரி
ரூ.9,990/-
3.5"
E-tel Curiosity i2
DUAL CORE
கிகா ஹேர்ட்ஸ் 1.3 ஐ கொண்ட டுவெல் கோர் புரொசசர்
(1.3GHZ Dual Core Processor)
3.5 அங்குல டச் திரை
256MB RAM
HSPA 21Mbps
வீடியோ கோல் / ஸ்கைப் கோல்
2MP பின் கமரா + முன்புற கமரா
டுவல் சிம்
32GB வரையிலான மெமரி சிப் இணைக்கும் வசதி (Micro SD Card)
1200 mAh பற்றரி
ரூ.8,990/-
Phone cover உடன்
பிராண்டெல் லங்கா (பிரைவேற்) லிமிடெட், இல. 06, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 04. 011 5 515 666. / 0777 99 44 99
கிளைகள் மற்றும் நாடு முழுவதும் விநியோகத்தர்கள்
www.etelmobiles.com | facebook.com/etelmobiles
SampathBank HNB BOC HSBC SEYLAN


CAPTAIN STEEL (PVT) LTD
ISO 9001 : 2008 SLSI Accredited BOI Company
[Formerly known as Ind-Sri Industrial Corporation (Pvt) Ltd]
Since 1994
TMT/QST Bars — SLS 375 (RB 500) / Conformed to BS 4449 — 8mm to 32mm
MS Angles — SLS 907 — 25 x 25 x 3 mm to 100 x 100 x 12 mm in various thickness
MS Flats — SLS 949 — 25 mm to 100 mm in various thickness
MS Round Bars — SLS 949 — 8 mm to 32 mm in 5.8 / 6 M
MS Square Bars — * — 12 mm to 25x25 mm in 6 M
MS 'I' Beams — * — 100 x 50 x 5 mm and 6 mm
MS Channels — * — 75 x 40 x 5 / 6 mm to 100 x 50 x 5 / 6 mm
*As per SLS / Customized Specifications
SLAB
CAPTAIN 20mm RB 500 SLS 375
MANUFACTURED FROM IMPORTED PRIME STEEL BILLETS IN CONFORMITY WITH SLS/BS
Rs 105,000/= + NBT + VAT UPWARDS
CORPORATE OFFICE
No. 220, Dr. N. M. Perera Mawatha, Colombo 08.
GM : 075 9985075 | 077 7772550
Tel : (011) 5044999 | Fax : (011) 2692678
gm@captainsteel.lk
REGD. OFFICE / STRUCTURAL MILL
Kuruduwatta State, Udumapitigama, Malwana.
Pradeep : 075 9985076 / 0777772552
Tel : (011) 5044956 - 7 | Fax : (011) 4011150
marketingmal@captainsteel.lk
MARKETING OFFICE / BAR MILL
249/3 Waikkiyawatta Road, Pahala Bomeriya, Kaduwela.
Lakshman : 0777 224089
Tel : (011) 5575800 | Fax : (011) 2142591
marketingkad@captainsteel.lk
FACTORY OUTLET
No 461, Old Moor Street, Colombo 12
Tavarathnam : 077 9703176 / Batish : 075 9985056
Tel : (011) 4345412-6 | Fax : (011) 4740690
factoryoutlet@captainsteel.lk
Quality – Reliability - Consistency
CAPTAIN STEEL
www.captainsteel.lk

## வரணி மருத்துவமனையில் பல் சிகிச்சை பிரிவு

தென்மராட்சி, செப்.7

வரணி பிரதேச மருத்துவமனை வளாகத்தில் 3.2 மில்லியன் ரூபா செலவில் பல் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்தக் கட்டடம் அமைப்பதற்கு வேள்ட் விஷன் நிறுவனத்தினர் 2.2. மில்லியன் ரூபாவும் பிரதேச மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியால் வரணிப் பிரதேச மக்களால் ஒரு மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (வ-9)

## சிங்கள மொழியில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.7

வடமாகாண அரச திணைக்களங்களில் கடமையாற்றும் நாடளாவிய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழியில் அமைந்த உரையாடல் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் மாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலக ஆளணிப் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படவுள்ளன.

பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 13,20,27, ஒக்ரோபர் 4, 11 ஆகிய தினங்களில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றவுள்ள உத்தியோகத்தர்களின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இல, பதவி, திணைக்களமும் அலுவலக முகவரியும், தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்களுடன் திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் முகாமைத்துவ அபிவிருத் திப் பயிற்சிப் பிரிவின் மின்னஞ்சலூடாக அனுப்பி வைக்குமாறு பணிப் பாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (வ-9)

## முன்பள்ளிகளுக்கு நல்லூர் பிரதேச சபையால் நிதி

நல்லூர் பிரதேச சபை தனது எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், பிரதேச முன்பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் தலா பத்தாயிரம் ரூபா வழங்குவது என்றும் சனசமூக நிலையங்களுக்கு ரூபா 20 ஆயிரம் வழங்கவும் தீர்மானித்துள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த குமார் தெரிவித்தார்.

பிரதேச சபை எல்லைக்குள் உள்ள 44 சனசமூக நிலையங்கள் சனசமூக நிலையங்கள் இயங்காத நிலையில் உள்ளன. முன்பள்ளி பிள்ளைகளுக்கு போஷாக்கு உணவு அவசியம் என்றும் முன்பள்ளிக்கு வழங்கப்படும் நிதி இதற்குப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)




## மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் மாதத்தில் இரு தடவைகள் துப்புரவுப்பணிகள்



வலி.வடக்கு, செப்.7

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் திருப் பணி முடியும் வரை மாதத்துக்கு இரு தடவைகள் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தில் இடம்பெறும் திருப்பணிகள் காரணமாக ஆலயச் சுற்றாடல் துப்புரவு அற்ற நிலையில் காணப்படுவதையிட்டு வடமாகாண ஆளுநர் வழிபாட்டுக்கு வந்த வேளையில் அவரது கவனத்துக்கு எடுத்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை- பிரதேச மக்களில் ஒரு தொகுதியினரும் வட மாகாண சபையின் ஆளுநர் அலுவலக ஊழியர்களும் மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி சாரணர்களும் இணைந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் சிரமதான பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து ஆலயத் திருப்பணி நடைபெறுவதை கருத்தில் கொண்டு மாதத்தில் இரண்டு தடவைகள் ஆலயத்துக்கு வழிபாட்டுக்காக வரும் அடியவர்களின் நன்மை கருதி இந்த நடவடிக்கையை வட மாகாண ஆளுநர் அலுவலகம் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ-88)



குருநகர் சென்.ஜேம்ஸ் வீதியில் உள்ள பிரதான வடிகால்வாய் துப்புரவாக்கப்பட்டு கழிவு நீர் கடலுக்கு வழிந்தோட சீர் செய்யப்பட்டது. மேற்படி வடிகால் வாயில் தேங்கிய கழிவுப் பொருள்களால் கழிவு நீர் வழிந்தோடுவது தடைப்பட்டது. மாநகர சபை தொழிலாளர்கள் அண்மையில் காலை இந்த வடிகால் வாயை துப்புரவு செய்து தேங்கிய கழிவுப் பொருள்களை அகற்றினர். (வ-17)




SINGER
Tefal Prestige KENWOOD SINGER SISIL Moulinex BEKO KRUPS
SISIL
SL-4MIXGR
Mixer Grinder
ரூ. 7,699/-
SINGER
KAEASYBLEN
Blender
ரூ. 4,999/-
SISIL
SL-SHMS949
Bowl Mixer
ரூ. 4,999/-
SINGER
KA-SKA3002
Food Processor
ரூ. 8,499/-
MADE IN FRANCE
Moulinex
MXDD100141
Stick Mixer
ரூ. 3,699/-
KENWOOD
KN-JE680
Juicer
ரூ. 12,999/-
KENWOOD
KN-JE280
Citrus Press
ரூ. 3,499/-
SINGER
Prisma Jug Kettles
ரூ.1,499/- முதல்
KA-PRISMA1.7SS
KA-PRISMA-1.7
KA-PRISMA-1.2
Moulinex
MXTT110031
Pop-up Toaster
ரூ. 3,199/-
SINGER
KA-SST032
Sanwich Maker
ரூ. 1,799/-
SISIL
SL-SST082
Sandwich Maker
ரூ. 1,999/-
SINGER
SRC-1018HS
Rice Cooker
ரூ. 3,199/-
SINGER
SLMC-18DSLHS
Multi-Cooker
ரூ. 8,999/-
அனைத்து சமையலறை உபகரணங்களுக்குமான
ஒரே கொள்வனவு நிலையம்
உலகத்தரமான நாமங்களையுடைய விசாலமான தெரிவுகளையும் ஒப்பிட முடியா தயாரிப்பு வரம்பையும்
நம்பிக்கையான சிங்கர் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளுங்கள்
Prestige
Pressure Cookers
ரூ3,799/-
PCD-80SS
PCP100
PCP-HAND48
PCP-COMB3875
MADE IN FRANCE
Tefal
SINGER
SIH-S217C
Induction Cooker
ரூ7,999/-
Prestige
Non-Stick Cookware
ரூ.,599/-
KENWOOD
KN-KMC010
Kitchen Machine
ரூ. 79,999/=
SINGER
GCB8402
Gas Oven
ரூ. 56,599/=
BEKO
B-HIZM64120SX
Built-in Oven Hobb
ரூ. 35,999/=
BEKO
B-CWB6441XN
Built-in Hood
ரூ. 19,999/=
KRUPS
KR.XP5240
Coffee Machine
ரூ. 29,999/=
MADE IN FRANCE
Tefal
Actifry TF-FZ706226
Fryers
ரூ. 44,999/=
Electric Oven
SINGER
ST034BHT ரூ. 11,199/=
Microwaves
SINGER
SMW23GA9 ரூ. 12,399/=
Gas Cookers
ரூ. 2,699/= முதல்
SISIL
SL-S203
HITACHI
H-MPH-21R1
SINGER
STT-300S
நிபந்தனைகளுக்குட்பட்டது
SINGER
011 5 400 400
www.singersl.com
SINGER Plus

# வலி. பிரதேச சபைக்கு கிடைத்தது 2010 இற்குரிய முத்திரை வரி

வலி.தென்மேற்கு, செப்.7

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குரிய - பல வருடங்களாகக் கிடைக்காமலிருந்த 2010 ஆம் ஆண்டுக்கான முத்திரை வரி 94 லட்சம் ரூபா செயலாளரின் விடாமுயற்சியால் திறைசேரியிடமிருந்து சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ள இந்தப் பணம் அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கும் வரை ஒரு வருட காலத்துக்கு நான்கு வங்கிகளில் நிலையான கணக்கில் வைப்பிலிடப்ப டவுள்ளது.

இதற்கான அனுமதியைப் பொதுச் சபை உறுப்பினர்கள் வழங்கியதை அடுத்து வங்கியில் பணத்தை வைப்பிலிடுவதற்கான ஒழுங்குகளைச் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 55 (153) பலாலி வீதியில் வீடு வாடகைக்குண்டு. கல்வி நிலையம், காரியாலயம் ஆகியவற்றிற்கும் உகந்தது. வாகனத்தரிப்பு வசதி உண்டு.

(வி16424) (12.3.6) தொடர்பு: 077 755 8340

## கார் விற்பனைக்கு

1998, volvo, s- 40, Full option, Manual, Lether Electric Seat, Sun Roof, Sweedan Made, Radio, Cassette, A/C, Contral lock, 301 - 9679 மிகவும் நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உள்ளது. விலை 13.5000.

தொடர்புகளுக்கு: 0775393728

## காணி விற்பனைக்கு

மண்கும்பானில் 4ஆம் வட்டாரப் பகுதியில் நல்ல குடிநீர் உள்ள இடத்தில் அதாவது opp. water supply முன்பாக 71 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். (51802)

தொடர்பு(குமார்-0750415775)

## தேவை

கொழும்பில் உள்ள பிராமணர் பங்களாவில் நிரந்தரமாக வீட்டு வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் 6,000/= தொலைபேசி - 0775393728 விதவை, அநாதைகள் விரும்பத்தக்கது.

(வி16441) (12.3.6) தொடர்பு: 077 539 3728



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**லோகப்பிரகாசம் றமணன்**
(H.N.D.A, B.Com, M.com)

அவர்கள் 02.09.2014 அன்று யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் A.A. ஆனந்தராசா முன்னிலையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தார். இவர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார். சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் நற்கருமங்கள் பல ஆற்றிவரும் ... ஆலயத்திற்கு அறப்பணிகள் ஆற்ற ... அம்பாள் திருவருள் புரிய சகல ... திருக்கடாட்சம் பெற்று வாழ வேண்டுமென பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் ஆதீனகர்த்தா
த. பரஞ்சோதி

உ
சிவமயம்

## விவாஹ சுப முகூர்த்த அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான ஜய வருஷம்
ஆவணித்திங்கள் 23ஆம் நாள் (08.09.2014) திங்கட்கிழமை சதய நட்சத்திரமும், சதுர்த்தசி திதியும், சித்த யோகமும் கூடிய காலை 9.04 மணிமுதல் 10.34 மணிவரையுள்ள துலா லக்கின முகூர்த்த வேளையில்

நல்லூர் சிவஸ்ரீ வைரவநாதக்குருக்கள்
ஸ்ரீமதி புவனேஸ்வரி அம்மா தம்பதியரின் பௌத்திரனும்
திருநெல்வேலி ஸ்ரீ காயாரோகண தேவஸ்தான பிரதமகுரு
சிவஸ்ரீ. சதாசிவக் குருக்கள்
ஸ்ரீமதி. பாக்கியலட்சுமி அம்மா
தம்பதியரின் தௌகித்திரனும்
எமது கனிஷ்ட புத்திரனுமாகிய சிரஞ்சீவி
**பிரம்மஸ்ரீ. ஞானானந்தசர்மா**
என்கிறவரனுக்கு

திருநெல்வேலி ஸ்ரீ காயாரோகண சுவாமி தேவஸ்தான
பிரதமகுரு. சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள்
ஸ்ரீமதி. பாக்கியலெட்சுமி அம்மா தம்பதியரின் பௌத்திரியும்
நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய ஆதீனகுரு
சிவஸ்ரீ. சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி. லலிதாம்பாள் தம்பதியரின் தௌகித்திரியும்
எமது ஏக புத்திரியுமாகிய சௌபாக்கியவதி
**லக்ஷ்மிப்பிரியா**
என்கிறவதுவை

கன்னிகாதான மாங்கல்யதாரண பாணிக்கிரகணஞ் செய்தவற்கு திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகரினதும் திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாட்சி சமேத காயாரோகண சுவாமியினதும் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாளினதும் திருநெல்வேலி சிவகாமசுந்தரி அம்பாளினதும் திருகோணமலை கும்பத்துமால் கருமாரி அம்பாளினதும் அருளும் குருவருளும் பித்ரு ஆசியும் கூடிவர பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் "மணமகள் இல்லத்தில்" நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்ட மித்திர பந்துக்களுடன் வருகை தந்து மணமக்களை மனமார வாழ்த்தி சபையைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சமாவர்த்தனம்: 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**
**வரவேற்பு உபசாரம்: 11.09.2014 வியாழக்கிழமை மாலை மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

சிவஸ்ரீ.வை.ஜெகதீஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி ஜெயகௌரி தம்பதிகள்,
சர்1 நாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7616.

(இரு வீட்டார் அழைப்பு)


சிவஸ்ரீ.சதா.இராதாகிருஷ்ணக்குருக்கள் ஸ்ரீமதி மஞ்சுபாஷினி தம்பதிகள்,
அருளம்பலம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777117765.

## இனி இல்லை நெஞ்சுவலி !!!

- இருதயநோய்
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புகள்
- மூட்டுவலி, முதுகு வலி
- புரோஸ்டேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- சைனஸ் பிரச்சினைகள்
- மனஅழுத்தம்
- இருமல், சளி
- படுக்கைப்புண்கள்
- நீரிழிவுப்புண்கள்
- நச்சுவைரஸ் பாதிப்பு
- பாலியல் குறைபாடு

நெஞ்சுவலி நீங்கி நலமான வாழ்வைப்பெற முடியும். எமது மருந்து இருதய இரத்தவோட்டத்தை சீர்படுத்தும். சிக்கலான சிகிச்சை அவசியமில்லை.

இருதய அடைப்பின் அறிகுறி
- நெஞ்சில் இறுக்கம்
- நெஞ்சில் எரிவு, மனஅழுச்சி
- சுவாசக்குறைவு
- நெஞ்சுவலி




FAIR PHARMA (PVT) LTD Sponsored by
(Kerala Ayurvedic Medicine)
0114 388101, 4 388102

**Free Consultation**
Daily @ Ceylinco House
Weekdays 9.00 a.m. - 5.00 p.m.
Saturdays 9.00 a.m. - 2.00 p.m.
Monthly Clinics are conducted islandwide

Ceylinco House, 11th Floor, No : 69, Janadhipathi Mawatha, Colombo 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 330 / 0777 708 310
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## SKILLED MIGRATION & ALL KIND OF VISAS

DON'T MISS IT



**SKILLED MIGRATION**

MA, Degree, Diploma & Trade Certificate உடன் 1 வருடத்திற்கு மேல் Working Experience உள்ளவர்கள் Canada, Australia & Newzeland க்கு புள்ளிகளின் அடிப்படையில் Family உடன் குடிபுகலாம்.

All Country Online Application Form filling and Appointment can made.

**STUDENT VISA**

Student Visa with O/L எல்லாவிதமான நாடுகளிற்கும் எடுத்து தர உதவி செய்யப்படும் ( Financial Sponsor for Student, Part time job, Accommodation) செய்து தரப்படும்.

And Also We are Handling Visit, Spouse, Parents, Dependant, Business, Reject & Refusal visa file.

All Visa Files are handling according to the immigration rules



Hotline 0773049775

**GIEEITH INTERNATIONAL**
No.14/1, Bodhirukkarama road(vihara lane), Colombo -06
Hotline - 0759049775,
UK- 00447970063965, Malaysia -0060102972486
Email- gieeithinternational@gmail.com

max adz

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில், யாழ்ப்பாணம் டவுனுக்கு அருகில் சகல வசதிகளுடன் 3 களஞ்சிய அறைகளுடன் (Stores) கொண்ட 3 பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு.

(வி16425) (12.3.6) தொடர்பு: 077 192 3430

## காணி விற்பனைக்கு

A9 றோட், பிரதான வீதி, மிருசுவிலில் 2 முக்கால் பரப்புக்கு, 10 குழி குறையவுள்ள காணி உடன் விற்பைனக்குண்டு. (வி16426) (12.3.6)

தொடர்பு: 077 900 4013

## For Sale





T.P. 0777033116

Ammann and Bomag diesel Double drum Rollers with Hatz Diesel engine, Selfstarter, Vibration system, Water sprinkling system Rs 590,000/=(made in Germany) Worthington Air Compressor 5.5H.P , K.W.4 , Rpm.2850 , Psi 16.5 and with 500Lt tank Rs 550,000/= (Made in Italy) M.K. France Machinaries

## மரண அறிவித்தல்

### கபிரியேல் மரியம்மா



தோலகட்டி வயாவிளானைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் மரியம்மா 04.09.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப் பிள்ளை - இசபேல் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற கபிரியேலின் அன்பு மனைவி யும், கருணாகரி (பிறேமா-பிரான்ஸ்) சொர்ணவதி, காலஞ் சென்றவர்களான பொஸ்கோ அல்வின், மரியானந்தம் அருள் நாயகம், திருஞானமணி மற்றும் ஜெயசீலி, திருஞானதீபன் பூபாலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரயோகம் (பிரான்ஸ்) மைக்கேல், புஸ்பவதி, ஜெயக்கொடி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (08.09.2014) திங்கட் கிழமை மு.ப 11.00 மணிக்கு கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக் கத்திற்காக புனித மரியன்னை சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதா கோவிலடி,
கோப்பாய். (51807)

தகவல்:
**பிள்ளைகள்.**

## திருமுருகன் கொம்நெற் (பிறைவெட்). லிமிட்டெட்

உள்நாட்டு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள்சேவை

THIRUMURUGEN COM NET (PVT) LTD.

- 11kg விற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள் ... அனுப்பிவைக்கப்படும்.
- CD, DVD என்பன மிக விரைவாக ...
- 220 நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- 3-5 வேலைநாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

இல. 271A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835

TCN Express
2b Nelsan Place,
Colombo - 6.

வாரத்தில் ஏழு நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

20 வருடங்களுக்கு மேல் முதன்முதலில் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)

குறிப்பு: எமது நிறுவனம் இங்கே குறிப்பிடப்பட்ட இடங்களில் மட்டுமே இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

# செல்வச் சந்நிதி ஆலய தேர்த் திருவிழா நாளை

கரணவாய், செப் 7

வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச் சந்நிதி ஆலயத்தின் தேர்த் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

அதில் இன்று இரவு 8 மணிக்கு சப்பரத் திருவிழா இடம்பெற்று நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு எம்பெருமான் தேரில் எழுந்தருளி 9 மணிக்கு வீதியுலா வருவார். மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை தேர் மற்றும் தீர்த்தம் ஆகிய திருவிழாக்களுக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெருமளவான பக்தர்கள் அணி திரள்வார்கள். இதனால் ஆலயப் பகுதியில் இடம்பெறும் திருட்டுக்கள் மற்றும் அசம்பாவிதங்கள் என்பவற்றைத் தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் தேர் மற்றும் தீர்த்தம் என்பவற்றுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதி பல அன்னதான மடங்களில் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-108)

# பரிசளிப்பு விழா இன்று

மட்டுவில் கிழக்கு ரதீஸ் பல்பொருள் விற்பனை நிலையத்தால் தரம்-5 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கும், மற்றும் ஏனைய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கும் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் பங்குபற்றியவர்களுக்குமான பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் வடக்குஅரசினர் தமிழ்க்கலவன் பாசாலையில் அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கலந்து கொள்வார்.(த-131)

## தொடர்ச்சிகள்

### இறைமையுள்ள

அவ்வாறு செய்யத் தவறினால்-அடக்குமுறை நடவடிக்கைகள் தொடருமானால் -ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தமிழர் தாயகம் எங்கும் அஹிம்சைப் போராட்டம் வெடிக்கும். அந்தப் போராட்டத்துக்கு எமது தோழமைக் கட்சிகள், தென்னிலங்கை முற்போக்கு சக்திகள் மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் முழு ஆதரவு வழங்க வேண்டும்.

பிளவுபடாத - ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு, கிழக்குப் பிரதேசத்துக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக் கும் வழிமுறையில், தன்னாட்சி அதிகாரம் கொண்ட ஓர் இறைமையுள்ள அரசு தமிழினத்துக்கு அதற்கேயுரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கிடைக்கும் வரையில் தொடர்ந்து போராடுவோம்.

அதிகளவிலான அதிகாரப் பகிர்வு அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண வழி செய்யும் புதியதோர் அரசமைப்பை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து செயற்படுமாறு தோழமைக் கட்சிகளுக்கும், முஸ்லிம்கள் உட்பட ஏனைய தரப்பினருக்கும், முற்போக்கு சக்திகளுக்கும் அழைப்பு விடுகின்றோம்.

இந்த முயற்சிகளுக்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஆதரவு தரவேண்டும் என்றும் நேற்று இறுதியாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மீள் குடியேற்றம் பாதிப்புற்றோர் மற்றும் அகதிகள் நிவாரணம்,

காணாமற்போனோர், போரினால் பாதிப்புற்றோரின் வாழ்வாதாரம்,

இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இனக் குடிப்பரம்பலை மாற்றும் ஆட்சியின் இன அடையாளங்கள் அழிப்பு, சர்வதேச சந்தர்ப்பங்களும் போர்க்குற்ற விசாரணைகளும், அடிப்படை ஜனநாயக உரிமைகள் மற்றும் மனித உரிமைகளும் மனிதாபிமான மீறல்கள், பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி திட்டமிடப்படலும், மாணவர் - இளைஞர் சமுதாயமும் பிரச்சினைகள், தமிழர் பண்பாடும், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்கள் மீதான அச்சுறுத்தல்கள், பண்பாட்டுச் சீரழிவுகள், தமிழர் தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி பெருமுதலாளித்துவம் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் தமிழர் வாழ்வு, விலைவாசி உயர்வு,பெரு முதலாளிகள், சர்வதேச இறக்குமதியின் விளைவு, சிறுவர்த்தகமும் உற்பத்தியாளர் பரிதவிப்பு, கருத்துச் சுதந்திரமும், பத்திரிகையாளர் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் உயிர் அச்சுறுத்தல்களும்,

பனைவளம் பயன்பாடும் மதுபானக் கட்டுப்பாடும், போரினால் அங்கவீனர்களும் சிறுவரும் அவர்கள் வாழ்வாதாரமற்றநிலை, தமிழ்ப் பிரதேசங்களில் பெண்களின் பாதுகாப்பும் பாலியல் வன்புணர்வுகளும், உள்ளூர் ஆட்சி மன்றமும் மாகாண சபையும், இரணைமடு நீரிணையும் ஆறுமுகம் திட்டமும், அரசியல் தீர்வு மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வும், மக்கள் போராட்டம்,

கனிய வளங்கள் தொடர்பானவை என்று 15 தீர்மானங்கள் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளன. (த-5)

### இறுதி

செயலகம் முன்பாக இராணுவத்தினரின் பெரிய முகாம் அமைந்துள்ளது. இந்த முகாம் தனியார் காணிகளையும், வீடுகளையும் உள்ளடக்கி அமைந்துள்ளது. இந்த முகாமினுள், 3 வீடுகள் மற்றும் ஒரு துண்டுக் காணி என்பன, நேற்று முன்தினம் உயிரிழந்த கனகசபை சிங்கரத்தினம் என்பவருக்குச் சொந்தமானது.

இவர் குறித்த வீடுகளை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினரிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் இது தொடர்பில் பல முயற்சிகளையும் அவர் எடுத்துள்ளார். தனது இறுதிக் காலத்தில், சொந்த வீட்டிலேயே வாழவேண்டும் என்றும் அதற்காகவாவது தனது ஒரு வீட்டையாவது விட்டுத் தருமாறு இராணுவத்தினரிடம் கெஞ்சிக் கேட்டிருந்தார்.

ஆனால் எந்தவொரு கோரிக்கைகளுக்கும் இராணுவத்தினர் செவி சாய்க்கவில்லை. இந்த நிலையில் அவர் தீடீரென்று நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இதனால் சிங்கரத்தினத்தின் உறவினர்கள், அவரது சொந்த வீட்டில் இறுதிக் கிரியைகள் செய்ய வேண்டும் என்ற இறுதி ஆசையை நிறைவேற்றுவதற்கு மாத்திரம் வீடு தருமாறு இராணுவத்தினரைக் கேட்டுள்ளனர். ஆனால் அதற்கு இராணுவத்தினர் இம்மியளவும் சம்மதம் தெரிவிக்கவில்லை.

இறுதிக் கிரியைகள் மாத்திரம் செய்து விட்டு வெளியேறுகின்றோம் என்றும், அவரது உடலையாவது வீட்டில் ஒரு முறை வைத்து அதன் பின்னர் எடுத்துச் செல்கின்றோம் என்று பலவாறு கேட்டபோதும் இராணுவத்தினர் எந்த வொரு சந்தர்ப்பத்திலும், அவரது இறுதி ஆசையை நிறைவேற்றச் சம்மதிக்கவில்லை.

இதனால் உறவினர்கள் வாடகை வீட்டிலேயே அவரது இறுதிக் கிரியைகளை நடத்தியுள்ளனர். இறுதி ஊர்வலம் எடுத்துச் செல்லப்படும் போது இராணுவ முகாமில் அவரது பூதவுடலை வைத்து விட்டுப் பின்னர் எடுத்துச் செல்வதற்கும் திட்டமிட்டுள்ளனர்.

இதனை அறிந்த இராணுவத்தினர், நேற்றைய தினம் குறித்த முகாமில் பாதுகாப்பு கடமைகளைப் பலப்படுத்தியதுடன், பொலிஸாரின் உதவியைப் பெற்று குறித்த பூதவுடலை அங்கு வைக்காமல் இருப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். இருந்தும் நேற்றைய தினம் இறுதி ஊர்வலம் எடுத்துச் செல்லப்பட்டபோது, முகாமின் முன்பாகத் தீடீரென்று அவரது உடலை கீழே இறக்கி வைத்துள்ளனர். அவர்களின் உறவினர்கள் அழுது ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கும் போதே, பொலிஸாரும் - இராணுவத்தினரும் அவரது உடல் வைக்கப்பட்டிருந்த சவப் பெட்டியை வலுக் கட்டாயமாக மூடி அதனை அந்த இடத்திலிருந்த உடனடியாகவே அகற்றியுள்ளனர்.

இதன் பின்னர் அருகிலுள்ள மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் ஈவு இரக்கமற்ற இந்தச் செயல் அந்தப் பகுதி மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (த-5-101)

### இலங்கை

ராகப் பதவியேற்றுள்ள ஹூஸைன், இலங்கை அரசு சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தனது உத்தியோக பூர்வ முதலாவது அறிக்கையிலேயே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் சபையினால், வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் முன்னெடுக் கும் இலங்கை மீதான சர்வ தேச விசாரணை குறித்த தனது நம்பிக்கையையும், அர்ப்பணிப்பையும் புதிய மனித உரிமை ஆணையாளர் சையத் அல் ஹூசைன் வெளியிடவுள்ளார் என்றும், இலங்கை அரசு இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அவர் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 27ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது, தனது முதலாவது உரையில் இதனை ஹூசைன் வலியுறுத்தவுள்ளார்.

இந்த உரையில், 'ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவினால் ஆணை வழங்கப்பட்ட இலங்கை குறித்த விசாரணைக்கு நான் அதிகளவு முக்கியத்துவத்தை வழங்குவேன். இந்த விசாரணைகள் குறித்து மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வாய் மூல அறிக்கையொன்றை வெளியிடும்.

நீதி மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றின் நலனைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசை இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இலங்கையில் மனித உரிமைப் பணியாளர்கள், சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள் தற்போது அச்சுறுத்தப்படுவது குறித்து நான் கவலையடைந்துள்ளேன். மேலும் முஸ்லீம், கிறிஸ்தவ சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களையும் நான் கடுமையாக கண்டிக்கிறேன்' என்று ஹூஸைன் தனது உரையில் தெரிவிக்கவுள்ளார்.

எனக்கு முன்னர் மனித உரிமை ஆணையாளராக பதவி வகித்தவர் வலியுறுத்தி வந்தது போல மனித உரிமை மீறல்கள், சர்வதேச குற்றங்களுக்காகப் பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்துவதே எனது இரண்டாவது முக்கிய பணியாக அமையும். தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதல் என்பது மேலும் துஷ்பிரயோகங்களுக்கும் மோதலுக்கும் வழிவகுப்பதுடன், பழிவாங்கும் உணர்வை நீடிக்கும்.

இடம்பெற்ற தவறுகளை வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதே குற்றச்செயல்கள் மீண்டும் இடம்பெறாததை உறுதிசெய்யும் வழிமுறையாகும்' என்றும் அவர் தனது கன்னியுரையில் நாளை குறிப்பிடவுள்ளார். (த-5)

### தமிழரசுக்

மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. நேற்றுக் காலை கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக மாவை. சேனாதிராசாவைத் தெரிவு செய்வதாகத் தெரிவித்து, தழிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டத் தலைவர் பொ.கனகசபாபதி அறிக்கையை வாசித்தார். தொடர்ந்து கட்சியின் பொதுச் செயலாளராக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராஜசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

சிரேஷ்ட துணைத் தலைவர்களாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜாவும், பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவர்களாக திருகோணமலையைச் சேர்ந்த துரைரட்ணசிங்கம், அம்பாறையைச் சேர்ந்த தோமஸ் வில்லியம், வவுனியாவைச் சேர்ந்த ப.சத்தியலிங்கம், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பரஞ்சோதி மற்றும் ஏ.எம். இமாம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் துணைப் பொதுச் செயலாளராகவும், சர்வதேசத் தொடர்பு துணைச் செயலாளராகவும் எம்.ஏ.சுமந்திரனும், கட்சியின் துணைப் பொதுச் செயலாளராக சீ.வி.கே. சிவஞானமும் தெரிவு செய்யப்பட்டனர். மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதாரம் தொடர்பான துணைச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், ஊடகத்துறை தொடர்பான துணைச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனும், மத விவகாரம் தொடர்பான துணைச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனும், கொள்கை பரப்புச் செயலாளராக சி.சிறீதரனும், சட்ட விவகாரத் துணைச் செயலாளராக சி.தவராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் மகளிர் அணி செயலாளர்களாக திருமதி அனந்தி சசிதரன், பேராசிரியர் நாச்சியார் ஆகியோர் தெரிவாகினர். நிர்வாகச் செயலாளராக சி.குலநாயகம் தெரிவு செய்யப்பட்டார். அரசியல் செயற்குழுத் தலைவராக இரா. சம்பந்தன் தெரிவானார்.

இளைஞரணிச் செயலாளராக, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த சிவகரனின் பெயரை, புதிய தலைவர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார். இதன்போது, அவரது நியமனத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அவர் ஏற்கனவே நான்கு ஆண்டுகள் இளைஞரணிச் செயலாளராக இருந்துள் ளார். அத்துடன் வவுனியா மாவட்டத்தில் தேசிய மாநாடு நடத்துகின்றோம். ஆனால் வவுனியா இளைஞரணிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அத்துடன் ஏனைய இடங்களிலும் இளைஞரணியின் மூலக் கிளைகள் அமைக்கப்படவில்லை. கட்சியின் கொள்கைகளையும், மாகாண சபை முதலமைச்சர், அமைச்சர்களையும் தனிப்பட்ட முறையிலும் பகிரங்கமாகவும் விமர்சித்துக் கட்சியால் ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டியவரை இளைஞரணிச் செயலாளராகத் தெரிவு செய்ய முடியாது. அத்துடன் இன்று மாலை (நேற்று) இளைஞரணி மாநாட்டை நடத்துவதாகத் தெரிவித்து விட்டு, காலையில் இளைஞரணியின் செயலாளரை எவ்வாறு தெரிவு செய்ய முடியும்? என்று அவருக்கு எதிரான வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

எனவே அவருக்குப் பதிலாக வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷின் பெயர் முன்மொழியப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த விடயத்தில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இடையில் தலையிட்ட புதிய தலைவர், இன்று மாலை (நேற்று) இளைஞரணி மாநாடு இடம்பெறவுள்ளது. அதற்கு சிவகரன் தான் தலைமை தாங்க வேண்டியுள்ளார். எனவே இந்த விடயத்தை இப்போது குழப்பாதீர்கள் எனக் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து அந்த விவகாரம் முடிவுக்கு வந்தது. சிவகரன் இளைஞர் அணிச் செயலாளராக அறிவிக்கப்பட்டார்.

கட்சியின் இணைப் பொருளாளர்களாக பொ.கனக சபாபதியும், அன்ரனி ஜெக நாதனும் தெரிவு செய்யப்பட்டனர். (த-5)

### சர்வதேச

பெறவுள்ளது.

இந்தக் கூட்டத் தொடரின் போது இலங்கை தொடர்பாக முக்கிய விடயம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. கடந்த 25 ஆவது அமர்வில், இலங்கையின் இறுதிப் போரில் இடம்பெற்ற மனிதாபிமான மீறல்கள், சர்வதேச மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சர்வதேச விசாரணையை முன்னெடுக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில், விசாரணையின் வாய்மொழி மூலமான அறிக்கை 27 ஆவது அமர்வில் - நாளை ஆரம்பமாகவும் அமர்வில் - சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பான அறிக்கையை நாளை ஆரம்பமாகவுள்ள அமர்வில், விசாரணை குழுவின் ஏற்பாட்டாளர் சன்ட்ரா பெய்டா வெளியிடவுள்ளார்.

இதேவேளை இலங்கையின் சார்பில் இந்தக் கூட்டத் தொடரில் அதிகாரிகள் மட்ட தூதுக் குழுவே கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக அமைச்சர்கள் மட்டத் தூதுக் குழு செல்லும் என்று தெரிவிக்கப்பட்டபோதும் இலங்கை அரசு அந்த முடிவிலிருந்து பின்வாங்கியுள்ளது.

ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான தூதுக் குழுவுடன், சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து இரண்டு உயர் அதிகாரிகள் இணைந்து கொள்ளவுள்ளனர். (த-5)

### ராணுவ

ளப்பட்டிருந்தது. வன ஜீவராசிகள் திணைக்களம் இதனை மேற்கொண்டிருந் தது. அங்கு 503 குதிரைகள் உள்ளதாக கணக்கெடுக்கப் பட்டிருந்தது.

இதன் பின்னர், அங்குள்ள குதிரைகள் படகில் ஏற்றப்பட்டு நெடுந்தீவுக்கு வெளியே கடற்படையினரின் உதவியுடன் கடந்த சில தினங்களாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இவ்வாறு அங்குள்ள குதிரைகள் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவை வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதியுடன், யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் அமைத்துள்ள விடுதிகளுக்கு, உல்லாசப் பிரயாணிகளை கவரவே கொண்டு செல்வதாகத் தற்போது தெரிய வந்துள்ளது. (த-5-101)

# உதைபந்தாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம்,செப்.7
கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு : பள்ளிக்குடா இளந்தளிர் விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து வேரவில் கலைமகள் விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா 2 கோல்களைப் பெற்றுக் கொள்ள ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் வேரவில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில், முழங்காவில் விநாயகர் விள்ளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

# தேசியமட்ட அரையிறுதிகளில் யாழ். மாவட்ட அணிகள்

யாழ்ப்பாணம்,செப்.7
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கபடிச் சுற்றுப் போட்டியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த நெல்லியடி மத்திய கல்லூரி அணி, பருத்தித்துறை கலட்டி ஆர்.சி. பாடசாலை அணி, பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி.வித்தியாலய அணி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி என்பன அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்று சனிக்கிழமை அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை கலட்டி ஆர்.சி. பாடசாலை அணியை எதிர்த்து பலாங்கொடை ஜெயந்தி மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் பருத்தித்துறை கலட்டி ஆர்.சி. பாடசாலை அணி 19:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

19 வயதுப்பிரிவு பெண்களுக்கான காலிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு கன்னாங்குடா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 21:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

15 வயதுப்பிரிவு பெண்களுக்கான காலிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி. வித்தியாலய அணியை எதிர்த்து கமுத்தேகம மத்திய வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் பண்டத்தரிப்பு யசிந்தா ஆர்.சி. வித்தியாலய அணி 30:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

15 வயதுப்பிரிவு பெண்களுக்கான காலிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து அம்பிலியபிட்டி சனாதிபதி வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 31:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ரி- 23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.7
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு :

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக ஏ அணி மோதவுள்ளது.

பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்ரோறிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.7
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டுமைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் மன்னார் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து யர்ழ்.உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (ரி- 23)



# அரையிறுதியில் தோல்வி; இறுதிப் போட்டியில் சம்பியன்

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் சானியா - பிளாக் ஜோடி தோல்வியடைய, கலப்பு இரட்டையர் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் சானியா - புரூனோ ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது. இதன் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில், இந்தியாவின் சானியா மிர்சா, பிரேசிலின் புரூனோ சோரஸ் ஜோடி, அமெரிக்காவின் அபிகைல் ஸ்பியர்ஸ், மெக்சிகோவின் சான்டியாகோ கான்சலேஸ் ஜோடியை சந்தித்தது.

முதல் செற்றை 6-1 எனக் கைப்பற்றிய இந்திய - ஸ்பெயின் ஜோடி, இரண்டாவது செற்றை 2-6 என இழந்தது. பின் எழுச்சி கண்ட சானியா ஜோடி, 'சுப்பர் டை பிரேக்கர்' சுற்றில் 11-9 என வென்றது. முடிவில் சானியா - புரூனோ ஜோடி 6-1, 2-6, 11-9 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, கலப்பு இரட்டையர் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

கலப்பு இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா வெல்லும் மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். முன்னதாக கடந்த 2009ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய ஓபனிலும், 2012இல் பிரெஞ்ச் ஓபனிலும் மகேஸ் பூபதியுடன் இணைந்து அவர் பட்டம் வென்றிருந்தார். சானியா மிர்சாவும், புருனோ சோரசும் முதன் முறையாக இணைந்து விளையாடியபோதே பட்டம் வென்றுள்ளதால், ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியிலும் சேர்ந்து விளையாட இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை மகளிருக்கான இரட்டையர் அரையிறுதிப் போட்டியில் சானியா மிர்சா - காரா பிளாக் ஜோடி தோல்வியடைந்தது. அரையிறுதிப் போட்டியில் சானியா மிர்சா - காரா பிளாக் ஜோடி மார்டினா ஹிங்கிஸ் - ப்ளேவியா பென்னிட்டா ஜோடியை எதிர்கொண்டது. இதில் சானியா ஜோடி 2-6, 4-6 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்தது. (ரி)

# ஆறுதல் வெற்றி பெற்றது இங்கிலாந்து; தொடரை சுவீகரித்தது இந்தியா

லீட்ஸ்ஸில் நடைபெற்ற ஐந்தாவதும், இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 41 ஓட்டங்களால் இந்தியாவை வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில் ஒருநாள் தொடரை இந்தியா 3:1 என்ற ரீதியில் கைப்பற்றிக் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. ரூட்டின் அதிரடிச் சதம் கைகொடுக்க 50 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 7 இலக்குகளை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ரூட் 113 ஓட்டங்களையும், பட்லர் 49 ஓட்டங்களையும், குக் 46 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் சமி அதிகபட்சமாக 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் முன்வரிசை வீரர்கள் சொதப்ப, 48.4 ஓவர்களில் 253 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் பறிகொடுத்து 41 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இந்திய அணி சார்பில் இறுதி நேரத்தில் தனித்து நின்று அதிரடியாகப் போராடிய ஜடேஜா 87 ஓட்டங்களையும், அம்பத்தி ராயுடு 53 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஸ்ரோக்ஸ் 3 இலக்குகளையும், அன் டர்சன், மொயின் அலி, பின் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சதமடித்த இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் தெரிவானார்.

ஆறுதல் வெற்றி குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் குக் கூறுகையில், ஒருநாள் தொடரை இழந்ததால் நாங்கள் மோசமான நிலையில் இருந்தோம். இதனால் கடைசி ஆட்டத்தில் வெல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் விளையாடினோம். ஆறுதல் வெற்றி கிடைத்தது திருப்தி அளிக்கிறது. ஜோ ரூட்டின் துடுப்பாட்டம் அபாரமாக இருந்தது. உலக கிண்ணத் தொடருக்கு இன்னும் 6 மாதங்கள் உள்ளதால் எங்கள் அணியை மேலும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என்றார்.




தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கருத்துத் தெரிவிக்கையில், ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏற்ற வகையில் இருந்தது. இதனால் 300 ஓட்டங்கள் வரை பெற்றிருக்க வேண்டும். மோசமான துடுப்பாட்டத்தாலேயே தோல்வி அடைந்தோம். நடுவரிசை ஓவர்களில் அடுத்தடுத்து இலக்குகள் சரிந்ததால் பாதிப்பு ஏற்பட்டது. பந்துவீச்சைப் பொறுத்தவரை எந்த விதத்திலும் குறை கூற முடியாது என்றார். (ரி)

# இலங்கைத் தமிழரசுக் கட்சி





## 15 ஆவது தேசிய மாநாடு

வீரம் விளைந்த வன்னி மண்ணின் வவுனியா மாநகரில் நடைபெறவுள்ளது

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்- ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"
வள்ளுவன்.

### 15 ஆவது தேசிய மாநாட்டில் எடுக்கப்படவுள்ள தீர்மானங்களின் முன்மொழிவுகள்

1. மீள் குடியேற்றம் பாதிப்புற்றோர் மற்றும் அகதிகள் நிவாரணம்;
2. காணாமல் போனோர் போரினால் பாதிப்புற்றோரின் வாழ்வாதாரம்:
3. இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பு மற்றும் இனக்குடிப் பரம்பலை மாற்றும் ஆட்சியின் இன அடையாளங்களின் அழிப்பும்:
4. சர்வதேச சந்தர்ப்பங்களும் போர்க்குற்ற விசாரணைகளும் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மற்றும் மனித உரிமை களும் மனிதாபிமான மீறல்களும்:
5. பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி திட்டமிடப்படலும் மாணவர் இளைஞர் சமுதாயப் பிரச்சினைகளும்:
6. தமிழர் பண்பாடும், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்கள் மீதான அச்சுறுத்தல்கள் பண்பாட்டுச் சீரழிவுகள்
7. தமிழர் தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி பெருமுதலாளித் துவம் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் தமிழர் வாழ்வு, விலைவாசி உயர்வு
8. பெருமுதலாளிகள், பன்நாட்டு இறக்குமதியின் விளைவு சிறு வர்த்தகமும் உற்பத்தியாளர் பரிதவிப்பும்:
9. கருத்துச் சுதந்திரமும், பத்திரிகையாளர் மற்றும் பத்தி ரிகை நிறுவனங்களின் உயிர் அச்சுறுத்தல்களும்:
10. பனைவள பயன்பாடும் மதுபானக் கட்டுப்பாடும்:
11. போரினாலும் போரின் பின் அங்கவீனர்களாக்கப்பட் டவர்களும் அநாதைச் சிறுவர்களும் அவர்கள் வாழ்வா தாரமற்ற நிலையும்:
12. தமிழ்ப் பிரதேசங்களில் பெண்களின் பாதுகாப்பற்ற நிலையும், பாலியல் வன்புணர்வுகளும்:
13. உள்ளூராட்சி மன்றமும் மாகாணசபையின் அதிகாரங்க ளும்:
14. இரணைமடு நீர் அணையும், ஆறுமுகம் திட்டமும்:
15. அரசியல் தீர்வு மற்றும் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வும் மக்கள் பேராட்டத் தீர்மானமும்

மேல்வரும் அடிப்படையில் மாநாட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்படும்

தேசிய மாநாட்டில் தமிழ்த் தேசிய உணர்வுடன் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி (64 ஆவது ஆண்டு நிறைவில்)
15 ஆவது தேசிய மாநாடு

**05,06, 07 – 09 – 2014 – வவுனியா**

பொதுக் கூட்ட அழைப்பு

### நிகழ்ச்சிகள்

1. வரவேற்பு நடனம்
2. வரவேற்புரை
3. தலைமையுரை
4. மாநாட்டுத் தீர்மானங்களும் பிரகடனங்களும்
5. தலைவர்கள் உரை

1. திரு. இரா சம்பந்தன் (பா.உ)
2. திரு.மாவை சோ.சேனாதிராசா (பா.உ)
3. திரு. பொன் செல்வராசா (பா.உ)
4. திரு.செல்வம் அடைக்கலநாதன் (பா.உ)
5. திரு. க. சுரேஸ் பிரேமச்சந்திரன் (பா.உ)
6. திரு. த. சித்தார்த்தன் வ.மா.உறுப்பினர்
7. திரு. ஹசன் அலி (பா.உ)
8. திரு. மனோ கணேசன் மே.மா உறுப்பினர்
9. கலாநிதி விக்ரமபாகு கருணாரத்தின கொழு.மா.நகர உறுப்பினர்
10. சிறப்புரை : உயர்திரு நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வடக்கு மாகாண சபை)

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. சி. சிறீதரன், திரு. ஈ. சரவணபவன், திரு. எம். எ. சுமந்திரன், திரு. ப. அரியனேந்திரன், திரு. சீ .யோகேஸ்வரன் மற்றும் திருமதி அனந்தி சசீதரன் உள்ளிட்ட மாகாணசபை உறுப்பினர்களும் மாநாட்டு தீர்மானங்கள் மீது உரையாற்றுவர்.

அத்துடன் நல்லாட்சிக்கான மக்கள் இயக்க பிரதிநிதிகள், மலையகப் பிரதிநிதிகள், தன்னார்வ நிறுவனங்களின் இயக்கு நர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளின் வாழ்த்துரைகளும் இடம் பெறும்.

பி.ப 7.30 இற்கு கலைநிகழ்ச்சிகள், பண்டார வன்னியன் நாடகம் இடம்பெறும்.

"எங்கள் தேசமக்கள் சுதந்திரம் - அந்த விடுதலை விடியலுக்காய் ஒன்றுபடுவோம்."

இடம்: கலாசார மண்டபம் வவுனியா
(தந்தை செல்வா அரங்கம்)
காலம் :07.09.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி

மாவை. சோ. சேனாதிராசா
பொதுச் செயலாளர்

மருத்துவ கலாநிதி. ப. சத்தியலிங்கம்
வரவேற்புக் குழுத் தலைவர்.

ஏற்பாட்டுக் குழு
இலங்கை தமிழரசுக் கட்சி
வன்னி மாவட்டம்.

## பிரபல சைவ உணவகம் இரண்டுக்கு வேலையாள்கள் தேவை 36, 38, யாழ்ப்பாணம்.

- ★ காசாளர்,
- ★ சமையல் வேலையாள்கள்
- ★ உணவு பரிமாறுபவர்
- ★ சமையல் உதவியாளர்கள்
- ★ மரக்கறி வெட்டுணர்

உணவு, தங்குமிடம் இலவசம்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 791 7753 (51811) (10)
(காலை 9.00 -4.00) திங்கள் - வெள்ளிவரை

## German Institute

German, Swiss நாடுகளுக்கான Deutsch மொழிகள் Germany யிலிருந்து வருகை தந்த ஆசிரியரால் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு முறைபரீட்சையில் 100% வீதம் மாணவர்கள் எம்மிடம் மட்டுமே சித்தியடைகின்றார்கள்.

யாழ்ப்பாணம், ஆவரங்கால், சுண்ணாகம்.
Mrs.P.Kajenthini
(51814) (10) 077 160 4823

## Physics Personal Classes- English Medium

B.Sc (Hons), MSc (London) தகுதி வாய்ந்த ஆசிரியரினால் சற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 443 1619 (51808) (10)

## A/L 2015,2016 தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களே!

மீண்டும்ஆரம்பத்திலிருந்து தொடர் செய்முறைப் பயிற்சிகள்

பொறியியல் தொழில்நுட்பம் | உயிர்முறைமைகள் தொ/நு

செய்முறைப் பரீட்சைக்கு ஏற்றவகையில் மாணவர்கள் தயார்படுத்தப்படுவர்

இவை அனைத்தும் விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரியில் மாத்திரமே

தொடர்புகளுக்கு : 021 320 7315, 077 2487774

A/L தொழில்நுட்பம் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

Chemistry இரசாயனவியல் A/L 2015, 2016
மற்றும் Day Class வகுப்புக்கள் ஆரம்பம் 07.09.2014
English & Tamil Mediam
A.Aravinthan Bsc(Hons) Spl.Chem

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு தேவை

நடுத்தர குடும்பம் ஒன்றுக்கு, பலாலி வீதியை அண்மித்த பகுதியில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு விலைக்குத் தேவை. (C/16549) (10)
தொடர்பு: 077 542 7426

## வேலையாள் தேவை

வடமராட்சி அச்சகம் ஒன்றுக்கு Code machine இயக்குனர் தேவை.
தொடர்பு: 077 6520 315 (49963) (10)

## Institute of Medical Sciences (IMS) 125, Main Street, Jaffna.

கற்கைநெறி ஆரம்பிக்கப்பட இருக்கின்றன
Certificate in Health care
கல்வித் தகைமை : G.C.E. (O/L) பயிற்சி காலம் : ஒருவருடம்
பயிற்சிக்கட்டணம் : இலவசம், 18 தொடக்கம் 35 வரை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: இல. 125, பிரதான வீதி, யாழ்ப்பாணம் மற்றும் கிறீன் மேமொறியல் வைத்தியசாலை, மானிப்பாய்.
021 320 2688 / 0777 286 164 (51812) (10)

## வவுனியா மற்றும் யாழ் நகரில் ……. Diploma in Mass Media அறிவிப்பாளர் பயிற்சி

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
காலம்: 3 மாதம்
(Full Time/ Part Time Course)
A/L முடித்து விட்டீர்களா? ஊடகத்துறையில் இணைந்துகொள்ள அரிய சந்தர்ப்பம்

- ✱ வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகின்றீர்களா?
- ✱ வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர் களை தலைசிறந்த அறிவிப்பாளராக உருவாக்கி வரும் வவுனியா Sun British College in Media Unit வழங்கும் அறிவிப்பாளர் பயிற்சிநெறி.
- ✱ வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பரம் தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 5 நாள் இணைய வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்.

அனைத்து வகுப்புக்களும் இம் மாதம் ஆரம்பம்
(சனி, ஞாயிறு தினங்களில் 9.00 மணி - 2.00 மணிவரை (48990) (10.6)

பதிவுகளுக்கு: SUN BRITISH COLLEGE
No.26. Appalo Hospital upstair Building, Station Road, Vavuniya.
T.P: 077 792 9475, 024 222 6649

## தேவை

அனுபவமிக்க காசாளர்/ பில்கிளார்க், சேல்ஸ்மன் தேவை.
தொடர்பு: 077 724 3091 (51752) (4.6.3)

## BIOLOGY

TAMIL & ENGLISH MEDIUM
Group and Personal classes
T.P: 077 306 3521/071 046 6594
JAFFNA, CHAVAKATCHERI & KILINOCHCHI (51745) (4.6.3)

## மரண அறிவித்தல்

23ஆம் பக்கத்தில் உள்ள **இராசரத்தினம் கணேசலிங்கம்** என்பவரின் மரண அறிவித்தலில் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமைபி.ப 1.00 மணிக்கு நடைபெற்று இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். எனச்சேர்த்து வாசிக்கவும்.
கரந்தன், நீர்வேலி. குடும்பத்தினர்.

## காணி விற்பனை

தாச்சை சீமா பெரியவிளான் 12 பரப்பு 5 குழி காணி விற்பனைக்குண்டு. இது மூன்று துண்டுகளாகப் பிரிக்கப் பட்டு படத்தில் காட்டப்பட்டவாறு உங்கள் விருப்பத்தின்படி பிரித்துத் தரப்படும்.




பெரியவிளான் சந்தியில் இருந்து 100மீற்றர் தூரத்தில் கீரிமலை, இளவாலை வீதியில் அமைந்துள்ளது
077 575 8601/077 637 9252/077 322 3171

## வெறுங்காணி தேவை

வியாபார வேலைத்தளம் ஒன்றுக்காக கைத்தொழில் நடவடிக்கைக்குப் பொருத்தமான வெறுங்காணி நீண்ட காலக் குத்தகைக்குத் தேவை. (F/16535)(4.6.3)
தொடர்பு: 076 668 8288

## கடை/கட்டடம் தேவை

யாழ். நகரப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளுக்கு உகந்த கடை அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை. ஆகக் குறைந்தது 1200 சதுரஅடி விஸ்தீரணமும் வாகனத் தரிப்பிடமும் எதிர்பார்க்கப்படுகிறது.
தொடர்பு: 076 669 5552 (F/16534)(4.6.3)

## அலுவலக இடம் வாடகைக்குத் தேவை

இலங்கையின் முன்னணி தனியார் நிறுவனம் ஒன்றின் அலுவலகத்தை நடத்துவதற்கும் அத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை (இலத்திரனியல், மின்னியல் பொருள்களின் பழுதுபார்த்தல்) மேற்கொள்வதற்கும் பொருத்தமான இடம் வாடகைக்குத் தேவை.

**குறித்த கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

- ✱ கட்டடத்தின் மொத்த சதுர அடி 8500 ஆகவும் கீழ்த் தளம் ஆகக் குறைந்தது 4000 சதுர அடியாகவும் இருக்க வேண்டும்.
- ✱ வாகனத் தரிப்பிட வசதி காணப்பட வேண்டும்
- ✱ யாழ்.நகர எல்லைக்குள் பிரதான வீதி ஒன்றை முகப்பாகக் கொண்டிருக்க வேண்டும்.

தொடர்புகளுக்கு: (F15680)(12.3.6)
077 176 8331, 021 222 4577, 021 205 8844

## நீங்கள் மாற்றத்துக்கு தயாரா?

நீங்கள் தற்பொழுது எடுக்கும் சிறந்த தீர்மானமே உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்
Chartered Accountants of Sri Lanka நடாத்தும் மாபெரும் தொழில் வழிகாட்டிக் கருத்தரங்கு

இடம் : Spectra Skills
No 19, Stanley Road, Jaffna
காலம் : 08 Sep 2014
ஆலோசகர் : Mr.E.Annalingam
F.C.A,FSCMA,Dip in Public Financial Management
தொலைபேசி இல : 021 222 1422 / 1423

முன் பதிவுகளுக்கு உங்கள் பெயரை 771519390 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கைநெறிகளை நடத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

**IELTS (ACADEMIC & GENERAL)**
Duration: 60hours, Week/ Week ends

- ➢ ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- ➢ முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- ➢ IELTS 5.5-7.0 Band பெறுவதற்கான உத்தரவாதம்

**City& Guilds A1, B1 -Duration: 60 hours, Week/ Week ends**



- ➢ UK அரசாங்கத்தினால் சிபாரிசுசெய்யப்பட்டது.
- ➢ இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- ➢ காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்
- ➢ ESOL , SESOL பரீட்சைகளைதவித்தனியாகதோற்றமுடியும்

**Certificate In SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning program)-Duration: 48hours Week/ Week ends

- ➢ ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனைவளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ➢ ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH- Duration: 3 Months, Week/ Week ends**
Writing - 60Hrs , Reading - 48Hrs,Listening - 48Hrs,Speaking - 48Hrs

- தொழில் தேடுவோர். தொழில் புரிவோர். A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாககற்பிக்கப்படும்
- 2014 A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்டரீதியில் கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்

அனைத்து கற்கை நெறிகளிலும் புதியபிரிவுகள் ஆரம்பம்
தவணைஅடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்.

Week days: 09.09.2014 | 15.09.2014
Week ends: 07.09.2014 | 14.09.2014

#197, Arasady Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk Web: www.lmcjaffna.edu.lk.
(C/16542)(10.6.3)

## கோரமண்டல் Coromandel



SIS 107

கொரமன்ඩල්
கோரமண்டல்
Coromandel
Stronger Cement - Wiser Investment

சென்னை சுப்பர் கிங்க்ஸ்
இந்திய சிமெந்து வரையறுக்கப்பட்ட கம்பனியால்
நல்ல தரம் வாய்ந்த

### கோரமண்டல் சிமெந்து

தரம் (வலிமை) : 42.5N
இன்று இலங்கையில் விற்பனையாகின்றது. (கிடைக்கின்றது)
இறக்குமதியாளரும் விற்பனை விநியோகஸ்தரும்
ஏ.எம்.ரி மாக்கெற்றிங் அன் டிஸ்ரிபியூட்டர்ஸ் பிறைவேற் லிமிட்டெட்
இல.230/232, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு – 13.
உடனடியாக இலங்கை முழுவதும் விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றனர். (51756)(7.6.3)

தொடர்புகளுக்கு : 011 244 4162, 011 406 1410, 011 406 1411, 011 406 1546
உடனடித் தொடர்புகளுக்கு : 077 845 8586
மின்னஞ்சல் : amtmarketingnew@gmail.com, amtclearing@gmail.com
தொலைநகல் : 011 234 2138

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.